Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, AUGUST 23, 2022

செவ்வாய்க்கிழமை, 23 ஓகஸ்ட் 2022 | ஒளி: 08 கதிர் 082 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## பல்கலைக்கழகங்கள் செப். முதல் ஆரம்பம்

இலங்கையில் உள்ள அனைத்து அரச பல்கலைக்கழகங்களிலும் செப்டெம்பர் மாதம் முதல் கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது. நாட்டில் நிலவும் சாதாரண நிலை காரணமாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழான

# கைதுகளுக்கு சர்வதேசம் கண்டனம்



AMNESTY INTERNATIONAL

### ஐரோப்பிய ஒன்றியம், சர்வதேச மன்னிப்பு சபை கடும் அதிருப்தி

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) கீழ் செயற்பாட்டாளர்கள் பலர் கைது செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் சர்வதேச நாடுகளும், அமைப்புகளும் தமது கடுமையான கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளனர். இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவும், சர்வதேச மன்னிப்பு சபையும் தமது கவலையை தெரிவித்துள்ளன.

சமீபத்தில் பல செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்ட நிலையில் அவர்களில் சிலர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே, ஹஷான் ஜீவந்த மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோர் கடந்த ஆகஸ்ட் 18ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற ஆர்ப்பாட்ட பேரணியை அடுத்து கைது செய்யப்பட்டனர். மேற்குறிப்பிட்ட மூவரும் பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டு, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்திருந்தது.

தொடர்ச்சி P2



## ஒரு மில்லியன் ரூபாவுக்கு ஏலம் போன மாம்பழம்

க அகரன்

மூன்று மாம்பழங்களும், ஒரு மாலையும் ஒரு மில்லியன் ரூபாவுக்கு ஏலம் போன நிகழ்வொன்று வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

மண்ணெணெய் விலை அதிகரிப்பால்

## மீன், உணவு விலையும் சடுதியாக அதிகரிக்கும்



மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் புதிய விலை 340ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதை அடுத்து, சில பொருட்களின் விலைகளில் மாற்றம் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மண்ணெண்ணெய் விலை உயர்வால் மீன்களின் விலை கடுமையாக உயரும் என மீன் வியாபாரிகள் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## விசாரிக்க ஜனாதிபதியின் அனுமதி கிடைத்துள்ளது

### பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவிப்பு

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே, ஹஷான் ஜீவந்த மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோரை பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரணைகளை நடத்த பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியின் அனுமதி கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட

தொடர்ச்சி P2

## இலங்கை தமிழர்கள் எண்மர் அகதிகளாகினர்

இலங்கையில் தொடரும் பொருளாதார நெருக்கடியால் மேலும் 8 இலங்கை தமிழர்கள் அகதிகளாக நேற்று (22) அதிகாலை தனுஷ்கோடி வந்தடைந்தனர். இதனால், இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு வந்த அகதிகளின் எண்ணிக்கை 149 ஆக உயர்ந்துள்ளது.



## நல்லூர் தேர் வெள்ளோட்டம்

எம்.றொசாந்த்



நல்லூர் கந்தசுவாமி கோவிலின் புனருத்தாரணம் செய்யப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம், நாளை(24) புதன்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தொடர்ச்சி P2

## 21,000 தொன் உரம் வழங்கியது இந்தியா



இந்தியாவின் விசேட உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 21,000 மெற்றிக் தொன் உரத்தை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இலங்கை மக்களுக்கு உத்தியோகபூர்வமாக, நேற்று (22) கையளித்தார்.

இந்தியாவின் விசேட உதவித் திட்டத்தின் கீழ் கடந்த மாதம் 44,000 மெற்றிக் தொன் உரம் வழங்கப்பட்ட நிலையில், 2022 ஆம் ஆண்டில் மொத்தம் 4 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உரம் உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமியுங்கள்



கடந்த மே மாதம் 9ஆம் திகதி முதல் ஜூன் 12ஆம் திகதி வரையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் மற்றும் அவற்றுக்கான காரணங்கள் மற்றும் அதன் பின்னணியில் உள்ளவர்கள் தொடர்பில் விசாரணை நடத்த ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்கள் உதய கம்மன்பில ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பில் நேற்று (22) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இதனை தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## மொட்டுக்குள் குடும்ப பிரச்சினை இல்லை

பா.நிரோஸ்



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து சுயாதீனமாகியிருப்பவர்கள் கட்சியிலிருந்து விலகிச் செல்வதே நல்லதென தெரிவித்த அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன, குடும்பப் பிரச்சினைகள் எவையும் பெரமுனவுக்குள் இல்லை என்றார்.

பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (22) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, பதவியிலிருந்து விலகிய பின்னர்

தொடர்ச்சி P2

## கறை படியாத இலக்குடன் விளையாட வேண்டாம்



நாட்டு மக்களையும் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டையும் கட்டி எழுப்புகின்ற இலக்கு ஐக்கிய மக்கள் சக்திக்கு உள்ளது எனத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ,

தற்போதைய அரசாங்கம் அழுக்கு படிந்ததாக இருந்த போதிலும் அழுக்கு படியாத இலக்குடன் தாம் கலந்தாலோசிக்கின்றோம் என்றார்.

அவ்வாறான அழுக்குகளற்ற இலக்குடன் விளையாட வேண்டாம் என தற்போதைய அரசாங்கத்தை வலியுறுத்திய எதிர்க்கட்சித் தலைவர் இத்தருணத்தில் நாம் செய்ய

தொடர்ச்சி P2

இலங்கை கடற்படை, விமானப்படைக்கு

## இந்தியாவுடன் இணைந்து எரிபொருள் வழங்கும் ஆஸி

இலங்கையின் கடற்படை மற்றும் விமானப்படைக்கு எரிபொருள் வழங்க இந்தியாவுடன் இணைந்து செயற்பட்டு வருவதாக கொழும்பில் உள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்தது. உயர்ஸ்தானிகராலயம், நேற்று (22) வெளியிட்ட டுவிட்டர் பதிவிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இலங்கையின் கடற்படை மற்றும் விமானப்படைக்கு எரிபொருள்

தொடர்ச்சி P2

வரலாற்றில் பாரிய விலை அதிகரிப்பு

## மண்ணெண்ணெய் விலை மளமளவென உயர்ந்தது

### பாதிக்கப்படும் தரப்புக்கு நிதி நிவாரணம்: அமைச்சர்



87 ரூபாயாக இருந்த ஒரு லீற்றர் மண்ணெண்ணெய், ஞாயிற்றுக்கிழமை (21) நள்ளிரவு முதல் அமலுக்கு வரும் வகையில் 253 ரூபாயால் உயர்த்தப்பட்டு, 340 ரூபாயாக அதிகரித்துள்ளது.

இலங்கை வரலாற்றில் மண்ணெண்ணெய் விலையில் ஏற்பட்ட பாரிய அதிகரிப்பாக இது பதிவாகியுள்ளதாக துறைசார் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், மண்ணெண்ணெய் விலை திருத்தத்துக்கான அவசியம் பல வருடங்களாக கட்டாயமாக இருந்ததாக மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, டுவிட்டர் பதிவின் மூலம் தெரிவித்துள்ளார்.

## மண்ணெண்ணெய் நிவாரணம் வழங்குக

### அமைச்சர் கஞ்சனவிடம் மனோ எம்.பி தெரிவிப்பு



தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் கொழும்பு மாவட்ட எம்பியுமான மனோ கணேசன், மின்சக்தி மற்றும் வலுசக்தி கஞ்சன விஜேசேகரவிடம் வலியுறுத்தி கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

மண்ணெண்ணெய் விலையேற்றத்தை சமாளிக்கும் முகமாக, குறைவருமான மக்களுக்கு, பணக்கொடுப்பனவுகளை நேரடியாக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. தமது தினசரி வாழ்வு தேவைகளுக்காக மண்ணெண்ணெயை பயன்படுத்தும் பின்தங்கிய மக்களுக்கு இந்த நிவாரணம் வழங்கப்படுவது வரவேற்கத்தக்கதாகும் என குறிப்பிட்டுள்ளார். எனினும், இந்த நிவாரணம், மண்ணெ ண்ணெயை தவறாது பயன்படுத்தும் மலைநாட்டு

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# கைதுகளுக்கு சர்வதேசம் கண்டனம்



AMNESTY INTERNATIONAL

இந்நிலையில், சமீபத்தைய கைதுகளில் பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்பட்டமை குறித்து கரிசனை கொண்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளது. பயங்கரவாத தடைச்சட்டத்தை தற்போது பயன்படுத்துவதில்லை என இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு வழங்கிய தகவலை ஆராய்ந்து வருகின்ற தருணத்தில் பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்படுவது குறித்த தகவல் வெளியாவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பயங்கரவதாக தடை சட்டம் இலங்கையில் துஷ்பிரயோக செயற்பாடுகளின் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. அதுமட்டுமல்லாது, இந்த சட்டத்தை ஏன் மீளப்பெற வேண்டும் என்பதையும் துல்லியமாக காட்டுகிறது. அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சிறுபான்மையினரை மௌனமாக்குவதற்கான ஒரு கருவியாக மீண்டும் மீண்டும் சட்டம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே போராட்டக்காரர்களை ஒடுக்குவதற்கு கொடூரமான பயங்கரவாத தடை சட்டத்தைப் பயன்படுத்துவது இலங்கை அரசாங்கத்தின் ஒரு குறைபாடாகும். ஏற்கனவே கடுமையாக விமர்சிக்கப்படும் இந்த சட்டத்தை உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, இவ்வாறான தடுத்து வைக்கும் உத்தரவுகளில் கையெழுத்திட வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பாதுகாப்பாளர்கள் தொடர்பான விசேட அறிக்கையாளர் மேரி லோலர் கோரிக்கை விடுத்துள்ளார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அவர்கள், கைது செய்யப்பட்டுள்ளமை குறித்து தாம் மிகுந்த கவலையடைவதாவும் அவர்களை அவ்வாறு செய்வது இலங்கைக்கு இருண்ட நாளாக அமையும் என மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பல்கலைக்கழகங்கள்...

கொரோனா தொற்று மற்றும் நாட்டின் தற்போதைய பொருளாதார சூழ்நிலை காரணமாக, பெரும்பாலான பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகள் ஒன்லைனில் இடம்பெற்று வருகின்றன.
கடந்த சில மாதங்களாக மாணவர்கள், பல்கலைக்கழகத்துக்கு சமுகமளிக்காத நிலை காணப்பட்டிருந்த நிலையில், செப்டெம்பர் முதல் நேரடியாக சமுகமளிக்க வேண்டும் என்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஒரு மில்லியன் ரூபாவுக்கு ஏலம் போன மாம்பழம்

வவுனியா மரக்காரம்பளை வீதி கணேசபுரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய அலங்கார திருவிழாவின் ஆறாம்நாள் திருவிழா ஒகஸ்ட் 21ஆம் திகதி நடைபெற்றது.

அன்று இறைவனுக்கு படைக்கப்பட்ட மூன்று மாம்பழங்களும் , ஒரு மாலையும் ஏலத்தில் விடப்பட்டது. போது கடும் போட்டிகளுக்கு மத்தியில் சபரிராஜன் என்ற மாணவன் அவற்றை ஒரு மில்லியன் ரூபாவுக்கு ஏலம் எடுத்துள்ளார்.

கிராமப்புற ஆலயம் ஒன்றில் இவ்வாறு பெரிய தொகைக்கு மாம்பழங்கள் ஏலம் எடுக்கப்பட்ட சம்பவம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. ஏலத்தில் கிடைக்கப்பெற்ற பணம், ஆலயத்தின் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

## 21,000 தொன் உரம் வழங்கியது...

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் நேற்று வெளியிட்ட செய்தியிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த உரமானது உணவுப் பாதுகாப்புக்கும் இலங்கை விவசாயிகளுக்கு உதவுவதற்கும் பங்களிக்கும் என்று அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் இந்தியாவுடனான நெருக்கமான உறவுகள் மற்றும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பரஸ்பர நம்பிக்கை மற்றும் நல்லெண்ணத்தின் மூலம் மக்களுக்கு நன்மைகளை வெளிப்படுத்துகிறது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டது.

உரம் கையளிக்கும் நிகழ்வில், துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, விவசாயம் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

## ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமியுங்கள்

ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்படுமாயின் வன்முறைகளுக்கு பொறுப்பானவர்கள் தொடர்பில் சாட்சியமளிக்க தயார். நாட்டை ஸ்திரமற்ற நிலைமைக்குக் கொண்டு செல்லும் சூழ்ச்சிகளை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள சக்திகள் மாத்திரமன்றி, அரசாங்கத்திற்கு உள்ளேயும் அப்படியான சக்திகளும் மேற்கொண்டன என்பது மிகவும் தெளிவானது எனவும் அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டால், தவறான முடிவுகளை எடுத்து நாட்டை இந்த நிலைமைக்கு தள்ளியவர்ள், தவறான முடிவுகளை எடுத்தவர்கள் யார் என்பதை சாட்சியங்களுடன் வெளியிட தயாராக இருக்கின்றேன் என தெரிவித்துள்ளார்

## மொட்டுக்குள் குடும்ப பிரச்சினை இல்லை

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முழு ஆதரவை வழங்கி தொடர்ந்து முன்நோக்கி பயணிக்கின்றோம்.

குறிப்பாக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியான பின்னர் நாட்டில் காணப்பட்ட எரிபொருள், எரிவாயு, உரம் உள்ளிட்ட பிரச்சினைகள் தீர்ந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடிவிட்டு பின்னர் வெளியில் வந்து சர்வகட்சி அரசாங்கத்தை விமர்சித்து பலர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்து வருவதாகவும் தெரிவித்தார். மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பால் கிராம மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், நாட்டில் மண்ணெண்ணெய் மாபியா காணப்படுகிறது. குறிப்பாக தனியார் பஸ்கள் மண்ணெண்ணெயை பயன்படுத்தியே இயக்கப்படுகின்றன என்றார்.

## கறை படியாத இலக்குடன் விளையாட வேண்டாம்

வேண்டிய விடயம் பதவிகளுக்காக போட்டியிடுவதல்ல என்பதையும் வலியுறுத்தினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஹொரண தேர்தல் தொகுதிக் கூட்டம் ஹொரண தேர்தல் தொகுதியின் பிரதான அமைப்பாளர் பீ.டீ.அபேரத்னவின் ஏற்பாட்டில், நேற்று முன்தினம் (21) இடம் பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ராஜபக்ஷ, வழிபாட்டுடன் பயணித்திருந்தால் தனக்கும் ஜனாதிபதி பிரதமர் பதவிகளை பெற்றுக் கொண்டிருக்கலாம் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நாட்டு மக்கள் ஒன்றிணைந்து ஒரே குரலாக வீட்டுக்குச் செல்லுமாறு கூறிய ராஜபக்ஷவிடமிருந்து பதவியைப் பெற்றுக் கொள்வதற்கு தமக்கு எந்த விதமான தேவைகளும் இல்லை என்றார்.

52 நாட்கள் ஆட்சியில் பிரதமர் பதவியை ஏற்குமாறு என்னிடம் வேண்டப்பட்ட எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒரே முடிவாக அதை ஏற்க மறுத்தேன். நாகரீகமான அரசியல் கலாசாரம் ஒன்று தம்மிடம் காணப்படுவதனால் அதனை எதிர்த்தேன் என தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், அது இன்றும் அவ்வாறே பேணப்படுகின்றது என்றார்.

2015 ஆம் ஆண்டு மக்கள் ஆணை ரணில் விக்கிரமசிங்கவுக்கே கிடைத்ததாக தெரிவித்த சஜித் பிரேமதாஸ, மக்களால் தெரிவு செய்யப்பட்டவருக்கு துரோகம் இழைத்து பிரதமர் பதவியை பெறுவதற்கு அப்போது தனக்கு எந்த தேவையும் காணப்படவில்லை என்றார்.

அன்று பிரதமர் பதவியை பெற்றுக் கொள்ளாமல் இருந்தது சரியாக இருந்தால் இன்று முழு நாடும் வேண்டாம் என்று தெரிவித்தவரிடமிருந்து பிரதமர், ஜனாதிபதி பதவிகளை பெற்றுக் கொள்ளாமல் இருப்பதும் சரியானதாகவே இருக்கவேண்டும் என்றார்.

## விசாரிக்க ஜனாதிபதியின் அனுமதி கிடைத்துள்ளது

பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

வசந்த முதலிகே, ஹஷான் ஜீவந்த மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகிய மூவரும் பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் தடுத்துவைக்கப்பட்டு, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படும் நிலையில், இது குறித்து கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. இந்நிலையில் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரணைகளை நடத்துவதற்கான அனுமதி பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்

## இந்தியாவுடன் இணைந்து எரிபொருள் வழங்கும் ஆஸி

வழங்க இந்தியாவுடன் இணைந்து பணியாற்றுவதில் அவுஸ்திரேலியா மகிழ்ச்சியடைகிறது என்றும் இது நாடு கடந்த குற்றங்களுக்கு எதிரான நமது நீண்டகால ஒத்துழைப்பு தொடர உதவும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியப் பெருங்கடல் அண்டை நாடுகளான, மூன்று நாடுகளும் பிராந்திய பாதுகாப்பைப் பாதுகாப்பதில் உறுதிப்பாட்டை பகிர்ந்து கொள்கின்றன என்று அந்தப் பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் அவுஸ்திரேலியாவை அடைய விரும்பும் பல இலங்கையர்களுடன் மனித கடத்தலை எதிர்த்து இலங்கையும் அவுஸ்திரேலியாவும் நெருக்கமாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது

## மண்ணெண்ணெய் விலை...

மேலும், மண்ணெண்ணெய்யை நம்பியுள்ள குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள், மீன்பிடி மற்றும் தோட்டத் துறைகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

செலவுகளுக்கு இணையான விலைகளுடன் நேரடி பண மானியத்தை மேற்குறிப்பிட்ட குடும்பங்கள் மற்றும் துறைகளுக்கு வழங்கவே அரசாங்கம் முன்மொழிந்துள்ளது என்றார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டமடைவதற்கு மானிய விலையில் மண்ணெண்ணெய் விற்பனை செய்தமையும் ஒரு முக்கிய காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மீன், உணவு விலையும் சடுதியாக அதிகரிக்கும்

மீன்பிடிப் படகுகள் பெரும்பாலும் மண்ணெண்ணெயை எரிபொருளாகப் பயன்படுத்துவதால், லீற்றர் ஒன்றுக்கு 253 ரூபாய் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதே அதிகரிப்பு விலை மீன்களுக்கும் சேர்க்கப்படும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போதுள்ள நிலையில் மீன் உணவுகளின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில் மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பினால் ஒரு கிலோ மீனின் விலை 5,000 ரூபாவைத் தாண்டுமென பேலியகொட மீன் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். மீன் சாப்பாடு பார்சலின் விலையை அதிகரிக்க நேரிடும் எனவும், ஏனைய மீன் உணவுகளின் விலையும் அதிகரிக்கப்படுமென பல்வேறு உணவகங்களின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## நல்லூர் தேர்...

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் பரிபாலகர்களான மாப்பாண முதலியார் பரம்பரையில் வந்துதித்த மூன்றாம் இரகுநாத மாப்பாண முதலியார் காலத்தில் கோவிலுக்கான முதலாவது தேர் உருவாக்கப்பட்டது.

அந்தத் தேர் பழுதடைந்த நிலையில் இருந்த காரணத்தால், அதன் அபாயத்தை உணர்ந்த ஷண்முகதாஸ் மாப்பாண முதலியார், புதிய தேர் ஒன்றை 1964ஆம் ஆண்டு திருப்பணி நிறைவேற்றி, தானும் வடம் பிடித்து இழுத்து இரதோற்சவத்தை தொடக்கி வைத்தார்.

அந்த தேரே 1964ஆம் ஆண்டு முதல் மகோற்சவ தேர்த்திருவிழாவின் போது, இழுக்கப்பட்டு வந்தது.

அந்த தேரே தற்காலத்தில் மீண்டும் புனருத்தாரணத் திருப்பணி நிறைவுற்று நாளை (24) வெள்ளோட்டம் காணவுள்ளது.

**“ நல்லூர் கந்தசுவாமி கோவிலின் பரிபாலகர்களான மாப்பாண முதலியார் பரம்பரையில் வந்துதித்த மூன்றாம் இரகுநாத மாப்பாண முதலியார் காலத்தில் கோவிலுக்கான முதலாவது தேர் உருவாக்கப்பட்டது.**

## மண்ணெண்ணெய் நிவாரணம் வழங்குக



பெருந்தோட்டங்களில் வாழும் பின்தங்கிய மக்களுக்கும், கொழும்பு மாநகரத்தில் வாழும் பின்தங்கிய குடியிருப்பு மக்களுக்கும் நிவாரணம் வழங்கப்படுவதை கட்டாயமாக உறுதிப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அறவழி போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது

# பயங்கரவாத தடைச்சட்டத்தை பிரயோகிக்க வேண்டாம்

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உள்ளிட்டவர்கள் கைது செய்யப்பட்டு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்படுவதற்கான செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிப்பதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.



"கடந்த 30 வருட யுத்தத்தின் போது, யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் மாத்திரமன்றி, அப்பாவி தமிழ் இளைஞர்கள் பலரும் இப்பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, எவ்வித விசாரணைகளுமின்றி அநியாயமாக நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். அதேபோன்று, ஈஸ்டர் தாக்குதலின் பிற்பாடு, அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள், உலமாக்கள், புத்திஜீவிகள், அரசியல் தலைவர்கள் என முஸ்லிம்களை குறிவைத்து இச்சட்டம் பிரயோகிக்கப்பட்டது. தற்போது, நாட்டினை நாசமாக்கிய ஆட்சியாளருக்கு எதிராக போராடிய சிங்கள, தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் மீது இச்சட்டம் பிரயோகிக்கப்படுவதற்கான எத்தனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அப்பாவி தமிழ் இளைஞர்கள் மீது பயங்கரவாத தடைச் சட்டம் பிரயோகிக்கப்பட்ட போதும், முஸ்லிம் இளைஞர்கள், உலமாக்கள், புத்திஜீவிகள் மற்றும் அரசியல் தலைவர்கள் மீது இச்சட்டம் பிரயோகிக்கப்பட்டபோதும், பெரும்பான்மை சமூகத்தவர்கள் போதுமான அளவில் அதற்கெதிராக கைகோர்க்க முன் வந்திருக்கவில்லை. ஆனால், இன்று இந்நிலைமையில் பாரிய மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

பயங்கரவாத தடைச் சட்டம் இந்த நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட காலம் முதல், பயங்கரவாதத்துக்கு எதிராக அது பயன்படுத்தப்பட்டதை விடவும் அரசியல் உள்நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களே அதிகம் என்பது எல்லோருமே அறிந்த விடயம். நான் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த போது, இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக பாராளுமன்றத்திலே மிகவும் காத்திரமாக குரல் கொடுத்த ஒருவர் என்பதை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். அதேசமயம், அவ்வாறான ஒருவர் இன்று ஜனாதிபதியாக இருக்கின்ற நிலையில், அறவழிப் போராட்டக்காரர்களை அவரது கையொப்பத்துடன், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எண்ணி மிகவும் வேதனையடைகின்றேன்.

இவ்வாறு பயங்கரவாத தடைச் சட்டத்தை ஜனநாயக ரீதியில், அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது பிரயோகிக்கின்ற பொழுது, தற்பொழுது நாடு எதிர்கொள்ளும் இக்கட்டான பொருளாதார நிலைமை இன்னும் மோசமடையும் என்பதை அச்சத்தோடு நினைவுகூற விரும்புகின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

## இந்தியாவின் உதவி

2022ல் இந்தியா இலங்கைக்கு வழங்கிய 4பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஆதரவின்கீழ் கடந்தமாதம் வழங்கப்பட்ட 44,0000 தொன் உரத்திற்கு மேலதிகமாக புதியதொகுதியாக இந்தியாவின் விசேட உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 21,000 மெற்றிக் தொன் உரத்தை இந்தியா வழங்கியுள்ளது.







## நடிகர் ஜெஹான் அப்புஹாமிக்கு பிணை

ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்த நடிகர் ஜெஹான் அப்புஹாமி, நீதிமன்றத்தில் சரணடைந்ததையடுத்து, அவரை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் திலின கமகே, நேற்று (22) கட்டளையிட்டார்.

ஜூலை மாதம் 9ஆம் நடைபெற்ற மக்கள் போராட்டத்தின் போது, கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறி நுழைந்ததாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

நீதிமன்ற உத்தரவை மீறியதாக தேடப்பட்டு வந்த நடிகர் ஜெஹான் அப்புஹாமி, நேற்றையதினம் (22) கோட்டை நீதவான் நீதிமன்றில் சரணடைந்தார்.

இதனையடுத்து, அவரை 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்குமாறே நீதவான் உத்தரவிட்டிருந்தார்.



## சங்காபிஷேகம் இன்று

எம்.றொசாந்த்

யாழ். பல்கலைக்கழக அருள்மிகு ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் கோவில் மண்டலாபிஷேக பூர்த்தி விழா, இன்று செவ்வாய்க்கிழமை (23) காலை 6 மணியிலிருந்து சங்காபிஷேகத்துடன் இடம்பெறவுள்ளது.

இதன்போது கோவில் வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மற்றும் சேர். பொன்.இராமநாதன் அவர்களது திருவுருவச் சிலைகள் திறந்து வைக்கப்படவுள்ளன.



பரமேஸ்வரா கல்லூரி இயக்குனர் சபையின் ஏற்பாட்டில், வேதாகம பாடசாலை ஆரம்ப நிகழ்வு மற்றும் கலைஞர்கள் கௌரவிப்பு என்பனவும் இடம்பெறவுள்ளன.

## விடுதலையை வலியுறுத்தி போராட்டம்




அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர்களான வசந்த முதலிகே மற்றும் ஹஷான் குணதிலக்க உள்ளிட்டவர்களை உடனடியாக விடுதலை செய்யக்கோரி கொழும்பிலும் வடக்கு கிழக்கிலும் சமூக ஆர்வலர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.






## புறப்பட்டது யுவான் வோங் 5

கடந்த 16 ஆம் திகதி ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்த சீனாவின் யுவான் வோங் 5 கப்பல் கப்பல் கடந்த ஏழு நாட்களாக ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த நிலையில், நேற்று (22) மாலை 4 மணியளவில் ஹம்பாந்தோட்டையில் இருந்து புறப்பட்டதாக துறைமுக அதிகாரி தெரிவித்துள்ளார்.



மண்ணெண்ணெய்

## விலை அதிகரிப்பு அசாதாரணமானது

பா.நிரோஸ்

ஒரே தடவையில் பாரியளவில் மண்ணெண்ணெயின் விலையை அதிகரித்துள்ளமை ஐக்கிய மக்கள் சக்தி கடுமையான எதிர்ப்பதாகவும், மீனவர்களும், மலையக மக்களுமே அதிகளவில் மண்ணெண்ணெயை பயன்படுத்துவதாக தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (22) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார். மண்ணெண்ணெயின் விலையை அசாதாரணமான முறையில் அரசாங்கம் அதிகரித்துள்ளது. வரலாற்றில் முன்னொருபோதும் இல்லாத வகையில் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்நாட்டில் வாழும் மீனவ குடும்பங்களும், மலையக மக்கள், கிராமத்தில் உள்ள ஏழை மக்களே மண்ணெண்ணெயை பயன்படுத்துகிறார்கள். மண்ணெண்ணெயின் விலையில் கூட நிவாரணத்தை வழங்க முடியாத நிலையே அரசாங்கத்துக்கு உள்ளது எனவும் தெரிவித்தார்.

## அ.தங்கத்துரையின் சிலை திறப்புவிழா

தீஷான் அஹமட்



திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் அருணாசலம் தங்கத்துரை அவர்களது 25ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு அன்னாரது திருவுருவச்சிலை திறப்பு விழாவும், நினைவு மலர் வெளியீடும், மூதூர், கிளிவெட்டி மகா வித்தியாலய தங்கத்துரை மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (28) காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தந்தை செல்வா என போற்றப்படுகின்ற சாமுவேல் செல்வநாயகமின் மைந்தனும், சட்டத்தரணியுமான சந்திரகாசன் கலந்துகொள்ளவுள்ளதுடன், அரசியல் பிரமுகர்களும், பொதுமக்களும் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

மூதூர் - கிளிவெட்டி எனும் கிராமத்தில் இருந்து 34 வயது இளைஞனாக இலங்கை பாராளுமன்றத்துக்கு தெரிவான அமரர் தங்கத்துரை 197ஆம் ஆண்டு தொடக்கம் 1997ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் தேர்தலில் போட்டியிட்ட இரண்டு தடவைகளும் அதிகூடிய விருப்பு வாக்குகளுடன் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

தனது அரசியல் காலத்தில் இன, மத, மொழி வேறுபாடுகள் இன்றி வேலைவாய்ப்புகள் மற்றும் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து மூவின மக்களினுடைய ஆதரவையும் பெற்றிருந்தார்.

## கோட்டாவுக்கு பாதுகாப்பு வேண்டும்

### ஜனாதிபதி ரணிலிடம் மொட்டு வலியுறுத்து

பா.நிரோஸ்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்புவதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் எனவும், கோட்டாபய ராஜபக் ஷ நாடு திரும்பினால் அவருக்கு பாதுகாப்பை வழங்க வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கோரிக்கை விடுத்துள்ளது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (22) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஜனாதிபதியுடன் அண்மையில் எமது கட்சி கலந்துரையாடியது. இதன்போது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீள நாட்டுக்கு வருவது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடினோம். இதன்போது கோட்டா நாடு திரும்புவதற்கான வசதிகளையும், நாடு திரும்பிய பின்னர் அவருக்கு தேவையான பாதுகாப்பை வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு

## அரசாங்கம் எவ்வாறு முகங்கொடுக்கும்?

பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை துரிதப்படுத்துவதாக ஜனாதிபதி கூறினாலும், பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தி அரசியல் செயற்பாட்டாளர்களை அடக்குவதையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

வசந்த முதலிகே உள்ளிட்ட சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கான காரணத்தை குறிப்பிட வேண்டும்.



ஜனாதிபதிக்கு எதிராகவும், தேர்தலைக் கோரியும் பேரணியாக செல்வது எவ்வாறு பயங்கரவாத செயற்பாடாக அமையும் எனவும் கேள்வி எழுப்பினார்.

நாட்டு மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்குப் பதிலாக அடக்குமுறைகளுக்காக அவசரகால சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்துகிறது. இச்சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும்.

**"பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கான காரணத்தை குறிப்பிட வேண்டும். ஜனாதிபதிக்கு எதிராகவும், தேர்தலைக் கோரியும் பேரணியாக செல்வது எவ்வாறு பயங்கரவாத செயற்பாடாக அமையும்?**

அடக்குமுறைகளையும் அரசாங்கம் கைவிட வேண்டும். அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடருக்கு அரசாங்கம் எவ்வாறு முகங்கொடுக்கும்? ஜி.எஸ்.பி வரிச் சலுகை எவ்வாறு கிடைக்கும்? எனவும் இதன்போது அவர் கேள்வி எழுப்பினார்.

அரசியல் ஆதாயங்களை தேடாமல் பயணித்தால்

# நாட்டை மீட்கலாம்

## ஸ்ரீ.ல.ஜ கட்சி வலியுறுத்தல்



நூருல் ஹுதா உமர்

அரசியல் ஆதாயங்களை தேடாமல், சகலரும் ஒருமித்த எண்ணத்தில் பயணித்தால் மட்டுமே நாட்டை மீட்கலாம் என ஸ்ரீ லங்கா ஜனநாயக கட்சியின் தலைவர் கலாநிதி அன்வர் எம் முஸ்தபா தெரிவித்தார்.

காத்தான்குடியில் நேற்று (22) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், அங்கு தொடர்ந்தும் கருத்துரைக்கையில்,

"எமது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட ஒன்றாகவே பார்க்க முடிகின்றது.

"இந்த நிலையில் இருந்து நாட்டை மீட்க ஒற்றுமையான விட்டுக்கொடுப்பு நிறைந்த அரசியல் கலாசாரத்தால் தான் முடியுமென உறுதியாக நம்புகின்றேன்.

"ஜனாதிபதி ரணில், நாட்டை சரியான வழியில் கொண்டுசெல்லும் சந்தர்ப்பத்தில், நாட்டிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களும், உறுப்பினர்களும் சுய அரசியல் இலாபங்களை மறந்து செயற்பட வேண்டும்.

"மக்கள் படும் கஷ்டங்களை கவனத்தில் கொண்டு, மக்களுக்கான 'பல்கட்சி' அரசொன்றை அமைத்து, அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தி, வெளிநாட்டு முதலீடுகளையும், சர்வதேச நாணய நிதிய உதவிகளையும் பெற்று நாட்டை மீட்டெடுக்க முன்வர வேண்டும்.

"இந்நேரம் அரசியல் செய்து, கட்சியை பாதுகாப்பது குறித்தோ அல்லது வாக்கு வங்கி குறித்தோ சிந்தித்து செயற்படக் கூடாது. நாளைய தலைமுறைக்கு சகல வளமும்மிக்க எமது நாட்டை எப்படி ஒழுங்காகக் கையளிப்பது என்பது பற்றி சிந்தித்து செயற்பட வேண்டும்" என்றார்.

நல்லூரான் சூழலை

# அசுத்தப்படுத்தாதீர்கள்

எம்.றொசாந்த்



நல்லூர் கோவிலுக்கு மாலை வேளைகளில் வருவோரில் சிலரின் செயற்பாடுகள் பக்தர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

கோவில் வீதியில் அங்க பிரதிஷ்டை செய்யும் வீதி சுத்தமாக இருக்க வேண்டும். எனினும், பொறுப்பற்ற சிலர், அந்த வீதிகளில் உணவு மீதிகளை வீசி செல்கின்றனர்.

திருவிழாவுக்கு வரும் சிலர் கோவில் வீதிகளில் தாம் உண்ட உணவுகளின் மீதிகள், கச்சான் கோதுகள், காரம் சுண்டலை சாப்பிட்ட மீதி பைகள் எனவற்றை எறிகின்றனர். சிலர் அவற்றை மண்ணுக்குள் புதைத்தும் விடுகின்றனர். அதனால் கோவில் வீதிகள் அசுத்தமாக காணப்படுகின்றன.

கோவில் வீதிகளில் பெருமளவான குப்பை தொட்டிகள் வைக்கப்பட்டுள்ள போதிலும் , அவற்றுக்குள் அவற்றை வீசாது, வீதிகளில் வீசி செல்பவர்களால் பக்தர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தி உள்ளது.

இதேவேளை, நல்லூர் கோவிலுக்கு மாலை வேளைகளில் வரும் ஒரு சில இளைஞர் குழுக்கள், அதிக சத்தம் எழுப்பும் கோர்ன்களை மக்கள் மத்தியில் ஊதிச் செல்கின்றனர்.

வயதானவர்கள், குழந்தைகள் மத்தியில் அதிக ஒலி எழுப்ப கூடிய அந்த கோர்ன்களை ஊதிச் செல்வதனால் பலரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

அதேபோன்று, கைக்குழந்தைகளுடன் சில பெண்கள், கோவில் சூழல்களில் யாசகம் பெற்று வருகின்றனர். அவர்களும் கோவிலுக்குச் செல்வோருக்கு இடையூறு விளைவிக்கும் முகமாக யாசகம் பெறுகின்றனர்.

அத்துடன், சிலர் அங்கு மது போதையில் யாசகம் பெற்று வருவதுடன், கோவிலுக்குச் செல்வோருக்கு இடையூறுகளையும் விளைவித்து வருகின்றனர்.

இவ்வாறு ஆலயத்திற்கு வருவோருக்கு இடையூறு விளைவிக்கும் முகமாக செயற்படுவோருக்கு எதிராக பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பலரும் கோரியுள்ளனர்.

# தொழிற்சாலையில் கொள்ளை

## ஐவர் கைது

பாறுக் ஷிஹான்



அம்பாறை, காரைதீவு பொலிஸ் எல்லைக்குட்பட்ட மாவடிப்பள்ளி பகுதியில் உள்ள உருக்கு இரும்பு தொழிற்சாலையில், சுமார் ஒரு கோடியே 50 இலட்சம் பெறுமதியான மோட்டார் மற்றும் மின் உபகரணங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இந்தக் கொள்ளை சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 21, 25, 36, 48, 34 வயதுகளையுடைய ஐவர், நேற்று (22) கைதுசெய்யப்பட்டுள்ளனர் என காரைதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தொழிற்சாலையின் பாதுகாப்புக்காக போடப்பட்ட பூட்டுகள் நேற்று முன்தினம் (20) அதிகாலை உடைக்கப்பட்டு, நுணுக்கமாகப் பொருட்கள் கொள்ளையிடப்பட்டிருந்தன. இதனை தொடர்ந்து தொழிற்சாலையின் உரிமையாளர், காரைதீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கினார். குறித்த முறைப்பாட்டுக்கமைய, கொள்ளைச் சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் இனங்காணப்பட்ட நிலையில், அவரை தொலைபேசி ஊடாக தொடர்புகொண்ட பொலிஸ் குழு, அவரை அணுகி புலனாய்வு நடவடிக்கையை மேற்கொண்டது.

இந்நிலையில், பல வருடங்களாக குறித்த தொழிற்சாலையில் பணியாற்றி வந்த சந்தேகநபர், நேற்று அதிகாலை கைதானதுடன், கொள்ளைச் சம்பவத்துக்கு உடந்தையாக செயற்பட்ட ஏனைய நால்வரும் கைதாகினர்.

இவ்வாறு கைதான சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கமைய, கொள்ளையடித்துச் செல்லப்பட்ட உபகரணங்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.



# மைதானத்தில் நாச வேலை

எச்.எம்.எம்.பர்ஸான்

வாழைச்சேனை பகுதியில் இயங்கி வரும் அஸ்பக் அகடமியின் விளையாட்டு மைதான சுற்றுமதில் மேல் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த பந்து தடுப்பு சீலை, இனந்தெரியாத நபர்களால் நேற்று முன்தினம் (21) தீ வைக்கப்பட்டுள்ளது.

குறித்த விளையாட்டு மைதானத்தில் வீரர்கள் பயிற்சியில் ஈடுபடும் போது பந்து சுற்று மதிலை தாண்டி வெளியில் செல்லாமல் தடுப்பதற்காக வேண்டி கடின சீலை பொருத்தப்பட்டிருந்தது.

அவ்வாறு பொருத்தப்பட்டிருந்த சீலைக்கு தீ வைக்கப்பட்டு அது முற்றாக எரிந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# கஜவள்ளி மஹாவள்ளி உற்சவம்

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தின் 21ஆம் திருவிழாவான நேற்று (22) காலை கஜவள்ளி மஹாவள்ளி உற்சவம் இடம்பெற்றது.

காலை நடைபெற்ற வசந்தமண்டப பூஜையைத் தொடர்ந்து, மகர வாகனத்தில் கஜவள்ளி மஹாவள்ளி எழுந்தருளி, பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார்.

அதேவேளை, நேற்று மாலை தங்க ரத உற்சவம் இடம்பெற்றதுடன், இன்று செவ்வாய்க்கிழமை (23) காலை மாம்பழத்திருவிழாவும் மாலை ஒருமுக திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

அத்துடன், நாளை புதன்கிழமை காலை 7 மணிக்கு சித்திரத்தேர் வெள்ளோட்டமும், மாலை சப்பரத் திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

(படங்கள்: எம். றொசாந்த்)

டீசல் பெற்றுத்தருமாறு

# விவசாயிகள் கவனயீர்ப்பு

சுப்பிரமணியம் பாஸ்கரன்

சிறுபோக அறுவடைக்கு டீசல் பெற்றுத்தருமாறு, நேற்று (22) காலை 10 மணியளவில் கிளிநொச்சி மாவட்டச் செயலாளரை சந்தித்து, மகஜர் கையளிக்கச் சென்ற கிளிநொச்சி விவசாயிகள், கவனயீர்ப்பிலும் ஈடுபட்டனர்.

சிறுபோக செய்கை மேற்கொள்ளப்பட்டு, அறுவடை இடம்பெற்று வரும் நிலையில், அறுவடைக்குத் தேவையான டீசலை விரைவாக பெற்றுத்தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது அங்கு வருகை தந்த கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சிறிமோகன் விவசாயிகளுடன் கலந்துரையாடினார். குறித்த விடயம் தொடர்பில் மாவட்டச் செயலாளர் ஊடாக பெற்றோலிய கூட்டுத்தாபனம் உள்ளிட்ட தரப்புடன் பேசி விரைவான நடவடிக்கை எடுப்பதாக அவர், விவசாயிகளிடம் தெரிவித்திருந்தார். இந்தச் சந்திப்பில், அறுவடைக்குத் தேவையான டீசல் கிடைக்காதவிடத்து, தாம் காலபோக செய்கையை மேற்கொள்ளப்போவதில்லை எனவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்போது ஊடகங்களிற்கு கருத்து தெிவித்த இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலாளர் சிவமோகன்,

"சிறுபோக அறுவடை இடம்பெற்று வரும் நிலையில், கடந்த சில நாட்களாக கிளிநொச்சி மாவட்டத்திற்கு டீசல் கிடைக்கப்பெறவில்லை. இந்த நிலயையில் விவசாய செய்கைகளை கால்நடைகள் சேதமாக்கும் அபாயம் காணப்படுகின்றது.

"எனவே, அறுவடையை விரைவாக மேற்கொள்ள வேண்டும்; அதற்குத் தேவையான எரிபொருளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சிறுபோக செய்கையை முழுமையாக நிறைவு செய்ய முடியாத எமது விவசாயிகள், காலபோக செய்கை தொடர்பில் பரிசீலிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்" என்றார்.



உணவுப் பஞ்சத்தை

# வெற்றிகரமாக எதிர்கொள்ளுதல்

## மரக்கறி விதைகள் விநியோகம்

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

உணவுப் பஞ்சத்தை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வகையில், உப உணவுப் பயிர் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, வீட்டுத் தோட்ட விவசாயிகளுக்கு குறிப்பாகப் பெண்களுக்கு மரக்கறிப் பயிர் நாற்றுகளும் பழ மரக்கன்றுகளும் விநியோகம் செய்யப்பட்டு வருவதாக ஏறாவூர் நகர விவசாய விரிவாக்கல் பிரிவின் போதனாசிரியை எம்.எச். முர்ஷிதா ஷிரீன் தெரிவித்தார்.

ஏறாவூர் நகர பிரதேசத்திலுள்ள கலையாற்றல் மிக்க பல்துறைக் கலைஞர்களுக்கு கத்தரி, மிளகாய் நாற்றுகளை வழங்கும் நிகழ்வு, ஏறாவூர் நகரில் நேற்று (22) இடம்பெற்றது.

அங்கு நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய விவசாயப் போதனாசிரியை முர்ஷிதா ஷிரீன், "நிலப்பரப்புக் குறைவாக இருக்கின்ற இடங்களிலும் கூட, பயிர்களை நாட்டி நாளாந்த வீட்டுக்குத் தேவையான மரக்கறிகளை, இலைக்கறிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

"இதன்மூலம் நமக்குத் தேவையான போஷணையையும் பெற்றுக் கொண்டு, நோய் நொடியற்று ஆரோக்கியமாக வாழ முடியும்" என்றார்.

# சுகாதாரம் இல்லையெனில் கடும் சட்டம் பாயும்

## உணவகங்களுக்கு எச்சரிக்கை

எம்.எஸ்.எம். ஹனீபா



அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட பிரதேசங்களில், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத உணவகங்கள் மற்றும் விற்பனை நிலையங்களுக்கு எதிராக, சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக, அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் ஏ.எம் இஸ்மாயில், நேற்று (22) தெரிவித்தார்.

ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசங்களிலுள்ள உணவகங்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் பாவனைக்கு உதவாத உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்களால் முறையிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸின் ஆலோசனைக்கமைய, பொதுச் சுகாதார பரிசோதகர்களால் உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்கள், பேக்கரிகள் என்பன திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

உணவு சட்ட விதிமுறைகள், நுகர்வோர் விவகார சட்டங்கள் மற்றும் அதன் விதிமுறைகளுக்கு அமைய வேண்டுமெனவும், உணவு தயாரிப்போர், உணவு விநியோகிக்கும் இடம், பயன்படுத்தும் உபகரணம் போன்றவற்றைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டுமெனவும், உணவகங்களில் பணியாற்றுபவர்கள் முகக்கவசம், கையுறை போன்றவற்றை பாவிக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளார்.

உணவு பாதுகாப்பு சட்ட திட்டங்களை மீறுபவர்களுக்கெதிராக நீதிமன்றினூடாக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதோடு, பாவனைக்குதவாத உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையங்கள் கண்டுபிக்கப்பட்டால், அதன் உரிமையாளருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்நிலையங்கள் மூடப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கைவிடப்பட்ட பஸ் நிலையத்தை

# வாகனத்தில் இருந்து பார்த்த அமைச்சர்!

எம்.றொசாந்த்



யாழ்ப்பாண நெடுந்தூர பஸ் நிலையத்தை, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன வாகனத்தில் சென்றவாறே பார்வையிட்டார்.

குறித்த நெடுந்தூர பஸ் நிலையம் தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சர் பந்துல குணவர்த்தன, பஸ் நிலையத்திற்கு செல்வதற்கு ஏற்பாடுகள், நேற்று முன்தினம் (21) செய்யப்பட்டிருந்த நிலையில், அமைச்சர் வாகனத்தில் இருந்தவாறே பஸ் நிலையத்தை பார்வையிட்டுவிட்டு, ஒருசில நொடிகளில் அங்கிருந்து சென்றார்.

இதனால் அமைச்சருடன் கலந்துரையாடுவதற்காக வந்திருந்த அதிகாரிகள் கூட அமைச்சர் சென்ற நிலையில் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

நகர அபிவிருத்தி மற்றும் கரையோர பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், நகர அபிவிருத்தி அதிகார சபையினரால் சுமார் 120 மில்லியன் ரூபாய் செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நெடுந்தூர பஸ் நிலையம், 2021 ஜனவரி மாதம் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டபோதும் இன்னமும் மக்கள் பாவனைக்கு வராத நிலையிலேயே காணப்படுகிறது.

இதனால் குறித்த பஸ் நிலையம் பராமரிப்பற்ற இடமாக மாறி வருவதுடன், சமூகத்துக்கு பிறழ்வான நடத்தைகள் இடம்பெற்று வருவதையும் அவதானிக்க கூடியதாக உள்ளது.

பஸ் நிலையத்தை இயக்குவதற்கு பல்வேறு தரப்பினர் முயற்சித்த போதும் கூட, இலங்கை போக்குவரத்துச் சபை அங்கிருந்து சேவையை மேற்கொள்ள மறுத்து வருவதால், அந்த பஸ் நிலையம் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

யாழ்., திருமலையை சேர்ந்த

# மேலும் எண்மர் தமிழகத்தில் தஞ்சம்

எம்.றொசாந்த்

இலங்கையில் இருந்து மேலும் 08 பேர் கடல் வழியாக தமிழகம் சென்று தஞ்சமடைந்துள்ளனர். யாழ்ப்பாணம், திருகோணமலையை சேர்ந்த 3 ஆண்கள், 2 பெண்கள், 3 சிறுவர்களாக மூன்று குடும்பங்களை சேர்ந்த 08 பேரே, படகொன்றில் தமிழகம், தனுஷ்கோடி பகுதியை நேற்று (22) சென்றடைந்து தஞ்சம் கோரியுள்ளனர்.

அவர்களை மீட்ட கடலோர பாதுகாப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, நேற்று முன்தினமும் (21) 08 பேர் கடல் வழியாக தமிழகம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பெருந்தோட்டத் தொழிலாளர்களை

# அரசாங்கம் பழிவாங்குகின்றதா?

## வடிவேல் சுரேஸ் எம்.பி கேள்வி



பெருந்தோட்ட நிர்வாகங்கள் தோட்டத் தொழிலாளர்களை பழிவாங்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றதா என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் கேள்வி எழுப்பினார்.

வெளிக் காவலாளிகளை தோட்ட தொழிற்சாலைகளுக்கு பாதுகாப்பு சேவையில் அமர்த்துவதற்கு தோட்ட நிர்வாகம் எடுத்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வண்ணம், மடூல்சீமை - மஹதோவ தோட்ட தொழிலாளர்கள் மஹதோவ தொழிற்சாலைக்கு முன்பாக நேற்று (22) காலை கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில், அது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், பெருந்தோட்ட நிர்வாகங்கள் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை தோட்ட தொழிற்சாலைகளில் பாதுகாவலராக நியமிப்பதற்கு எத்தனிக்கின்றனர்.

இதற்கு காரணம் என்ன? மறைமுகமாக பெருந்தோட்டத் தொழிலாளர்களை பழிவாங்கும் செயற்பாடுகளில் தோட்ட நிர்வாகம் ஈடுபடுகின்றதா என்றும் கேள்வியெழுப்பினார்.

இலாப நோக்கத்துடன் செயற்படும் பெருந்தோட்ட நிர்வாகங்கள், இலாபத்திற்கு காரணமான தொழிலாளர்களைப் பற்றி துளியேனும் சிந்திப்பதில்லை. அவர்களுடைய மிலேச்சத்தனமான நடவடிக்கைகளால் பல தொழிலாளர்கள் பெருந்தோட்டத்துறையைத் துறந்து, வேறு வேலைகளுக்கு செல்லும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

அந்நிய செலாவணியை நாட்டிற்கு ஈட்டிக் கொடுப்பதில் பாரிய பங்குதாரர்கள் பெருந்தோட்டத் தொழிலாளர்களே. இருப்பினும் மனிதாபிமானமற்ற ரீதியில் பெருந்தோட்ட நிறுவனங்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன.

தொடர்ந்தும் தன்னிச்சையாக பெருந்தோட்ட நிர்வாகங்கள் செயற்பட்டால் பாரியதொரு தொழிற்சங்க போராட்டத்திற்க்கு முகம் கொடுக்க நேரிடும் என்றார்.

## தொழில் வழிகாட்டல் செயலமர்வு...





ரோட்டரி கொழும்பு மிட்சிட்டி மற்றும் ரோட்டரக்கட் பீஸ் சிட்டி ஹட்டன் கழகங்களின் அனுசரணையில், தலவாக்கலை தேசிய பாடசாலையில் உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல் செயலமர்வை நடத்தியது. இந்நிகழ்வில் ரோட்டரி கழகத்தின் மாவட்ட பொதுச் செயலாளர் குமார் சுந்தரராஜ், ரோட்டரி கொழும்பு மிட்சிட்டியின் தலைவர் சலீக்க, ரோட்டரக்கட் பீஸ் சிட்டி ஹட்டன் கழகத்தின் தலைவர் வினோஷா கயாலினி, நுவரெலியா வலயக்கல்வி உதவி பணிப்பாளர் சாந்தகுமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (பி. கேதீஸ்)



# மலையக சிறார்களை வீட்டு வேலைக்கு அமர்த்துவதை நிறுத்துங்கள்

■ டி.ஷங்கீதன்



மலையக பெற்றோர்களே சிந்தியுங்கள் பிள்ளைகளை வீட்டு வேலைக்கு அனுப்பாதீர்கள். தொடர்ந்தும் எங்களுடைய பிள்ளைகளை பலிகொடுப்பதை நிறுத்துங்கள் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

2021 ஜூலை மாதம் 15 ஆம் திகதி மரணமடைந்த ஹிசாலினியின் துயரம் நிறைவடைவதற்கு முன்னால் மற்றுமோர் இழப்பை சந்தித்திருக்கின்றோம். எனவே, பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை வேலைக்கு அனுப்புகின்ற பொழுது ஒரு முறைக்கு பலமுறை சிந்தித்து செயற்படுங்கள் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

மஸ்கெலியா, மொக்கா தோட்டத்தை சேர்ந்த 17 வயதுடைய சிறுமி ஒருவர் நீச்சல் தடாகத்தில் விழுந்து கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர், உயிரிழந்துள்ளமை தொடர்பாக தெரியவந்துள்ளது.

இந்தச் செய்தியை கேள்விப்படுகின்ற பொழுது உயிரிழந்த ஹிசாலினியே நினைவுக்கு வருகின்றது. இந்த மரணங்களுக்கு முக்கிய காரணமாக இருப்பது பெருந்தோட்ட பகுதிகளில் நிலவுகின்ற வறுமையேயாகும். அத்துடன், இடைத்தரகர்கள் தங்களுடைய இலாபத்துக்காக, இவ்வாறான சிறுவர்களை வெளிமாவட்டங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்கின்றார்கள் என்றார்.

இந்த இடைத்தரகர்களாக செயற்படுகின்றவர்களை இனங்கண்டு அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும். குறிப்பாக மலையக இளைஞர் - யுவதிகள் இந்த விடயத்தில் பொறுப்பாக செயற்பட வேண்டும். கிராம சேவகர்களும் தங்களுடைய சமூகத்தின் மீது கரிசணையை செலுத்த வேண்டும்.

பெற்றோர்கள் சிந்தித்து செயற்படாத வரையில் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது என்பது உண்மை. மலையக பெற்றோர்கள் அனைவருக்கும் விழிப்புணர்வை ஏறபடுத்த வேண்டியது நம் அனைவருடைய கடமையாகும் என்றார்.

உரிய நேரத்தில் வாகனம் கிடைக்காமல்

# தொழிலாளியின் உயிர் பறிபோனது

■ எம். குமார்

உரிய நேரத்தில் வைத்தியசாலைக்கு போக முடியாத காரணத்தால் பலாங்கொடை- வலேபொட தோட்டத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

51 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் வலேபொட தோட்ட கொழுந்து மடுவத்தில் கொழுந்து நிறுவையில் ஈடுபட்டு கொண்டிருந்த போது திடீரென மயங்கி விழுந்துள்ளார்.

மயங்கி விழுந்தவர், நீண்ட நேரத்தின் பின்னர், மாரதென்ன தோட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

மரண பரிசோதனையில் அவர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்தமை தெரியவந்துள்ளது.

மயங்கி விழுந்தவரை உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதற்கு, அத்தோட்டத்தில் வாகனங்கள் ஏதும் இருக்கவில்லை என்றும் நீண்ட நேரத்திற்குப் பின் தோட்ட நிர்வாக அதிகாரி ஒருவரின் வாகனத்திலேயே மயங்கி விழுந்தவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

இதேவேளை, தாமதிக்காமல் வந்திருந்தால் உயிரை காப்பாற்ற முயற்சி செய்திருக்கலாம் என்று வைத்தியர்கள் தெரிவித்ததாக உயிரிழந்தவரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

# போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது

■ ராமு தனராஜா

பசறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வன்வே பகுதியில் போதை மாத்திரைகளுடன் ஒருவர் நேற்று முன்தினம் (21) மாலை பசறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 28 போதை மாத்திரைகளும் 800 மில்லிகிராம் கஞ்சா போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பசறை குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து, வன்வே பகுதியில் சோதனையை மேற்கொண்ட போதே 28 வயதான சந்தேகநபர் நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை பதுளை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

மண்ணெண்ணெய் விலை அதிகரித்தாலும்

# மலையகத்துக்கு மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை

■ ரஞ்சித் ராஜபக்ஷ

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் நேற்று முன்தினம் (21) இரவு முதல் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்யின் விலை 253 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும், ஹட்டன் மற்றும் ஏனைய பெருந்தோட்ட நகரங்களில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இரண்டு மாதங்களுக்கும் மேலாக மண்ணெண்ணெய் விடுவிக்கப்படவில்லை என நுகர்வோர் கூறுகின்றனர்.

மின்வெட்டு காரணமாக தோட்டங்களை அண்மித்த பகுதிகளில் உள்ள மக்கள் இரவில் இலாம்பு ஏற்றுவதற்கு மண்ணெண்ணெய் பயன்படுத்துகின்றனர். மேலும் மண்ணெண்ணெய்யை பயன்படுத்தும் தோட்ட தொழிலாளர்கள் தற்போதைய




விலை உயர்வால் மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பை ஏற்றுக்கொள்ள முடியாது என கூறுகின்றனர்.

மண்ணெண்ணெய் விலையை அதிகரித்ததன் பின்னர், அதன் தேவை குறையலாம் என ஹட்டன் பிரதேசத்தில் மண்ணெண்ணெய் விற்பனை செய்யும் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

மல்லியப்பு தோட்ட கோவிலிருந்து


# உண்டியல்கள் மாயம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன்- மல்லியப்பு தோட்டத்தில் உள்ள கோவில் உடைக்கப்பட்டு, அங்கிருந்த இரண்டு உண்டியல்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

குறித்த கோவிலுக்குள் நேற்று முன்தினம் (21) இரவு 10 மணியளவில் நுழைந்த சிலர், கோவிலிருந்த உண்டியலைகள் இரண்டை எடுத்துச் சென்று, ஹட்டன்- கொழும்பு பிரதான வீதியில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு அருகிலுள்ள தேயிலைத் தோட்டத்தில் வீசிச் சென்றுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் கோவில் நிர்வாகத்தால் ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் திருடர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.



புளத்கொஹுபிட்டியவில்

# ஐவருக்கு 5ஆயிரம் தேயிலை கன்றுகள் வழங்கப்பட்டன

■ என்.ஆராச்சி



பெரண்டினா அபிவிருத்தி நிறுவனத்தால் புளத்கொஹுபிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் உரமிவெல, கண்டவ, உடபொத, நெலுவாக்கன மற்றும் நாரங்கல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கான ஐந்தாண்டு கிராமிய சமூக அபிவிருத்தித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்கீழ் மேற்குறிப்பிட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 175 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், 35 குடும்பங்கள் தேயிலை பயிர்ச்செய்கைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு, ஆயிரம் தேயிலை கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டதுடன், ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 கிலோ கிராம் உரமும் வழங்கப்படுகிறது.

மேலும் உற்பத்தி நிலத்தை தயார் செய்வதற்காக அந்த விவசாயிகளுக்கு தலா பத்தாயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மூன்று வருட காலம் வரை இவர்களுக்கான ஆலோசனைகள், சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய முதற்கட்டமாக ஐந்து பயனாளிகளுக்கு ஐயாயிரம் கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில், பெரண்டினா அபிவிருத்தி நிறுவனத்தின் கேகாலை மாவட்ட சமூக அபிவிருத்தி உத்தியோகஸ்தர் சந்தன குமார ஜயலத் கலந்துகொண்டார்.

# இராகலையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் கைது

■ ஆ.ரமேஸ்

இராகலை முதலாம் பிரிவு தோட்டத்தின் தேயிலை மலையில் சட்ட விரோதமாக மாணிக்கக்கல் தோண்டிய மூவரை இராகலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் (21) மாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட மூவரும் 30, 45, 41 வயதானவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, மாணிக்கக்கல் அகழ்வுக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேக நபர்களை வலப்பனை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா தமிழ் இசைக்கலைஞர்கள் அபிவிருத்தி ஒன்றியம்

# மூன்றாம் ஆண்டில் கால்பதிக்கின்றது

■ ஆ.ரமேஸ்

நுவரெலியா மாவட்ட கலைஞர்களின் வாழ்வாதாரம், அபிவிருத்தி என்பவற்றை நோக்காக கொண்டு ஆரம்பிக்கப்பட்ட நுவரெலியா தமிழ் இசைக்கலைஞர்கள் அபிவிருத்தி ஒன்றியம், தனது மூன்றாவது வருட பூர்த்தி விழாவை எதிர்வரும் 27ஆம் திகதி, சனிக்கிழமை ஹட்டன்- டிக்கோயா நகர மண்டபத்தில் கொண்டாடவுள்ளது.

2019ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பானது, பல சவால்களுக்கு முகம் கொடுத்து, மூன்று வருடத்தை பூர்த்தி செய்கின்றது என ஒன்றியத்தின் செயலாளர் இராமன் கேதீஸ்வரன் தெரித்தார்.



இம்மாதம் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் டிக்கோயா நகர சபை மண்டபத்தில், ஒன்றியத்தின் மூன்றாம் ஆண்டு பூர்த்தி விழாவை ஸ்தாபக தலைவர் பாடகர் ராஜ்போரா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் மத அனுஷ்டானங்கள், அண்மையில் மறைந்த பிராந்திய ஊடகவியலாளர் விஜயரட்னம், ‘கீபோட்’ வாத்திய கலைஞரும் பாடகருமான கண்ணா ஆகியோருக்கான ஆத்மசாந்தி பிரார்த்தனையுடன் அவர்கள் பற்றிய விவரணம் இடம்பெறவுள்ளது.

இதன்போது கௌரவிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளதாக ஒன்றியத்தின் செயலாளர் இராமன் கேதீஸ்வரன் தெரித்தார்.

அத்துடன் அன்றைய தினம் புதிய கலைஞர்கள் ஒன்றியத்துடன் இணைந்து கொள்ளும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக தெரிவித்த அவர் சகல கலைஞர்களையும் இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

> **புதிய கலைஞர்கள் ஒன்றியத்துடன் இணைந்து கொள்ளும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக தெரிவித்த அவர் சகல கலைஞர்களையும் இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது**

# கண்களை மூடிக்கொண்டு தீர்மானங்களை எடுக்கவேண்டாம்

பகுத்தறிந்து அல்லது சுயதர்க்கம் செய்துகொண்டோ இல்லையேல், ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டோ, தீர்மானங்களை எடுக்கவேண்டும். எடுத்தோம் கவிழ்த்தோமெனத் தீர்மானங்களை எடுப்பதால், பாரிய சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். அரசாங்கத்தால் எடுக்கப்படும் தீர்மானங்களைப் பார்க்குமிடத்து, 'அடிவயிற்றில்' எவ்வளவு பலமாக அடிக்கமுடியுமோ, அந்தளவு பலமாக அடிவிழுகிறது.

ஜெட் வேகத்தில் விலைகளை அதிகரிக்கும் அரசாங்கம், ஆமை வேகத்தில் விலைகளை குறைக்கிறது. இதனால், நுகர்வோர் பெரும் துன்பங்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். இதுவரையிலும் விலை அதிகரிப்பை பொறுத்துக்கொண்டும் சமாளித்துக் கொண்டுமிருந்த மக்கள், தலையை தூக்கமுடியாத அளவுக்கு இருக்கின்றனர்.

விலை அதிகரிப்பெல்லாம், அப்பாவி மக்களின் வயிற்றில் அடிக்கும் வகையிலேயே இருக்கின்றன. இறுதியாக, மண்ணெண்ணெயின் விலையை அதிகரித்தமையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதனால், சாதாரண மக்களே பெரும்பாடும் படுவர்.

கொழும்பில் சேரிப்புறங்களில் வாழ்வோரையும், கிராமங்களில் வாழ்வோரையும், பெருந்தோட்டத் தொழிலாளர்களையும் இந்த மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பு நேரடியாகத் தாக்கும். அத்துடன், மீன்பிடித்தொழிலில் ஈடுபடுபவர்களும் குடிசைகளில் வாழ்வோரும் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுக்கப் போகின்றனர்.

மண்ணெண்ணெய்யை நம்பியுள்ள குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள், மீன்பிடி மற்றும் தோட்டத் துறைகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளமை வரவேற்கத்தக்கது. எனினும், எவ்வளவு தூரத்துக்கு சாத்தியமாகும் என்பதற்கு எதிர்காலமே பதில்சொல்லும்.

எரிவாயு, மண்ணெண்ணெய்க்கு வரிசையில் காத்திருக்க முடியாதவர்கள், மின்சாரத்தில் இயங்கும் அடுப்புகளை கொள்வனவு செய்துகொண்டனர். மின்கட்டணமும் எகிறி இருப்பதால், மீண்டும் மண்ணெண்ணெய்க்கு மாறினர். அடுத்து, மாற்றி யோசிப்பதற்கே தற்போது வழியில்லை.

ஏற்கெனவே, படாத துன்பங்களை எல்லாம் பட்டுக்கொண்டிருக்கும் மக்களுக்கு, மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பானது. 'மரத்தால் விழுந்தவனை, மாடேறி மிதித்த கதை'யாய் இருக்கிறது. மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பால், மீனின் விலை பலமடங்காக அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை.

கைத்தொழில் துறைகளைச் சார்ந்தவர்களும் இயந்திர தொழிற்சாலைகளின் மீதும் இந்த விலை அதிகரிப்பு நேரடியான தாக்கத்தை செலுத்தும். சொற்ப எண்ணெயில் எரிந்துகொண்டிருந்த குப்பி இலாம்பையும், அரசாங்கத்தின் விலை அதிகரிப்பு தீர்மானம், அணைத்துவிட்டது. இருண்ட யுகத்துக்குள் இழுத்துக்கொண்டு செல்வதிலேயே குறியாக இருக்கின்றது என்பது, மட்டுமே உண்மையாகும்.

விலை அதிகரிப்புகள் வருமானத்தை விஞ்சி நிற்கும் நிலையில், இன்னுமின்னும் விலைகள் அதிகரிக்கப்படுமாயின், பட்டினிச் சாவை எதிர்கொள்வதை விட, வேறு மாற்றுவழிகளே இல்லை. ஆகையால், தீர்மானங்களை எடுக்கும்போது, பல கோணங்களில் ஆராய்ந்து எடுக்கவேண்டும். குறிப்பாக, சாமானியர்களைப் பற்றி ஆகக்கூடுதலாக கரிசணை காட்டவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு

எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

எல்லாத் தேவைகளுக்குள்ளும் அகப்பட்டுவிடக்கூடாது. மிகஅவசியமான தேவைகளில் மட்டும் கவனம் செலுத்துங்கள். பானை ஒன்றுக்குள் இஷ்டப்படி, அரிசியைத் திணிக்க முடியாது. பக்குவமாக படிப்படியாக முன்னேறுவதே வாழ்க்கை.

முடியாத வேலைகளில் முதலில் தலையிட வேண்டாம். இயல்பான கருமங்களுக்கு முதன்மை அளிக்கவும். மனம் தெளிவாக இருக்கும்போது, விட்ட கருமம் செய்வதில் கஸ்டம் வராது.

இந்தப் பிறப்பில் முடியாததை எந்தப் பிறப்பில் செய்யப்போகின்றீர்கள்? திட்டமிடுங்கள்; கருமங்களைத் தொடங்குங்கள்! உலகத்தில் உயிரினங்கள், தங்களின் வாழ்க்கையை ஓட்டுவதற்காகச் செய்யும் முயற்சிகள், எங்களை விட மிக அதிகமாகும். பருந்து இரைதேட, தேனீக்கள் தேன் எடுக்க, எத்தனை மைல்கள் பயணம் செய்கின்றன தெரியுமா?

எங்களைச் சுற்றியுள்ள விலங்குகள், பறவைகள், ஊர்வன எல்லாமே போராடியபடியேதான் வாழ்கின்றன. இவைகளுக்கு வாழ்க்கையில் வெறுப்பு வரவே வராது. மனிதன் அச்சப்படுகின்றான்; வேறு இனங்கள் அச்சப்படுவதே கிடையாது.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

### சர்வகட்சி அரசும் தேசிய அரசும்:

# மக்களைப் 'பேய்க்காட்டும்' கற்பிதங்கள்

மொஹமட் பாதுஷா

சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கான பணிகள் மெல்ல மெல்ல கைவிடப்பட்டு, தேசிய அரசாங்கத்தை நிறுவுவதை நோக்கி, இலங்கை அரசியல் நகர்ந்து கொண்டிருக்கின்றது.

மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முழுநேரமும் முன்னுரிமை அளிக்காமல், ஒரு பிச்சைக்காரனின் புண்ணைப்போல, அவற்றைக் காண்பித்து, எல்லாத் தரப்புகளும் அரசியல் செய்கின்ற போக்கையே காண முடிகின்றது.

மக்கள் புரட்சி மூலம், புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றது தொடக்கம், 'சர்வகட்சி அரசாங்கம்' ஒரு பேசுபொருளாக இருக்கின்றது. ஆர்ப்பாட்டக்காரர்களும் மக்களும் ஏன், சர்வதேச சமூகமும், நாட்டில் சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமைவதையே விரும்புகின்றன என்ற தோற்றப்பாடு உருவாகியிருந்தது.

ஜனாதிபதியாக பதவியேற்ற கணத்தில் இருந்து ரணில் விக்கிரமசிங்க, "நாட்டுக்காக இணைந்து பணியாற்ற வாருங்கள்" என அனைத்துக் கட்சிகளுக்கும் அரசியல் அணிகளுக்கும் அழைப்பு விடுத்தார்; அது நல்ல விடயமாகும்.

அதுமட்டுமன்றி, அப்படியொரு கோசத்தை தூக்கிப் பிடிக்காமல், அவரால் களமாட முடியாத யதார்த்த நிலையும் அவருக்கிருந்தது. அப்படிச் செய்தால், மாறுவேடம் பூண்ட 'மொட்டு'க் கட்சியின் ஆட்சியாளர் என்ற தோற்றப்பாடு ஏற்பட்டு விடும்.

இதனடிப்படையில், சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்காக பல சந்திப்புகள் இடம்பெற்றன. பிரதான எதிர்க்கட்சி, சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, முஸ்லிம் கட்சிகள், மலையகக் கட்சிகள் எல்லாம், ஜனாதிபதி தரப்புடன் ஏதோ ஓர் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டன. பொதுஜனப் பெரமுனவில் பெருமளவானோரும், ஜனாதிபதிக்குப் பின்னால் நிற்கின்றனர்.

பெரும் பிரளயங்கள் ஏற்படாவிட்டால், இன்னும் குறைந்தது ஒரு வருடத்துக்காவது ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதியாக பதவியில் இருக்கப் போகின்றார். அவர், எல்லாத் தரப்புகளின் கோரிக்கைகளையும் நிறைவேற்ற மாட்டார்; எனினும், ஏனைய தரப்புகளின் அபிப்பிராயங்களுக்கு செவிகொடுத்து கேட்கின்ற ஓர் ஆட்சியாளராகத் திகழ்கின்றார்.

எவ்வாறிருப்பினும், சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்காக கடந்த ஒரு மாதகாலமாக எடுக்கப்பட்ட முயற்சிகள், இந்த நிமிடம் வரை கைகூடவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி, சற்று விலகி நின்றே ஜனாதிபதியுடன் உரையாடல்களில் ஈடுபட்டது. மக்கள் விடுதலை முன்னணி ஆரம்பத்திலிருந்தே, இந்தக் கோட்பாட்டை எதிர்த்தது மட்டுமன்றி, ரணிலும் பதவி விலக வேண்டும் என்பது உள்ளிட்ட நடைமுறைச் சாத்தியமற்ற கருத்தியலையே விதைத்துக் கொண்டிருக்கின்றது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, 10 கோரிக்கைகளை முன்வைத்து பேசியது. சில விடயங்கள் தொடர்பாக, ஜனாதிபதி நல்லெண்ண சமிக்கையை வெளிப்படுத்தி இருந்ததாக அறியவருகிறது.

இதேவேளை, முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் போன்ற கட்சிகளும், ஜனாதிபதி தரப்பைச் சந்தித்து பேசியிருந்தன. வழக்கத்துக்கு மாறாக சில கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டதாக அறிய முடிகின்றது.

எவ்வாறிருப்பினும். பலமுனைப் பேச்சுகளில் அனைத்து தரப்பின் எதிர்பார்ப்புகளும் ஒரு பொதுவான புள்ளியில் சந்திக்கத் தவறியிருக்கின்ற பின்னணியில், சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கான நிகழ்தகவுகள் குறைவடைந்து போவதாகத் தெரிகின்றது.

இதனால், சர்வகட்சி அரசு என்ற நிலைப்பாட்டில் இருந்து விலகி, தேசிய அரசாங்கம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை, ஜனாதிபதி மேற்கொள்வதாக கூறப்படுகின்றது. சர்வகட்சி அரசு அமைக்கும் முயற்சிகள் தோல்வியடைவதற்கு, வெளிப்படையானதும் மறைமுகமானதுமான பல காரணங்கள் உள்ளன.

'மொட்டு' அணி, ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கின்றமை, சர்வகட்சி அரசிலும் செல்வாக்குச் செலுத்துமளவுக்கு ராஜபக்ஷர்கள் ரணிலின் பின்னால் நிற்கின்றார்கள். இந்நிலைமை, ஜனாதிபதி ரணிலை பொறுத்தமட்டில், பெரும் பலமாக தோன்றினாலும், சர்வகட்சி அரசில் இணைய நினைக்கும் கட்சிகளுக்கு, அது நம்பிக்கை தரும் போக்கு இல்லை.

ரணில் விக்கிரமசிங்கவின் வழக்கமான சூட்சும நகர்வுகளும் அதிகாரத்துக்கு வந்த பிறகு அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளும், ஆரம்பத்தில் இருந்த நம்பிக்கையில் சிறு பின்னடைவை ஏற்படுத்தி இருக்கின்றது.

வழக்கம்போல அமைச்சுப் பதவிகளுக்கான சண்டைகள், சர்வகட்சி அரசாங்கத்தில் குறிப்பிட்ட தரப்பு இணைவதைத் தீர்மானிக்கும் காரணியாக உள்ளது. அத்துடன், சில அரசியல் அணிகளுக்கு, இன்னும் எவ்வளவு காலத்துக்கு இந்த அரசாங்கம் நீடிக்கும்? இவ்வாட்சி வெற்றிகரமாக அமையுமா என்ற ஐயப்பாடும் ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் ஆட்சிமாற்றத்தில், ஒரு குறிப்பிடத்தக்க வகிபாகத்தை கொண்டிருக்கின்ற இந்தியா, அமெரிக்கா, சீனா உள்ளிட்ட நாடுகளினதும் அதேபோன்று ராஜபக்ஷர்களின் திரைமறைவு நகர்வுகளும், சர்வகட்சி அரசாங்கம் அமைவதில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

உண்மையில், சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமைய வேண்டும் என்று, ஜனாதிபதி கூட மனதார விரும்பினாரா? அல்லது, தன்னிடம் அரசியல் அணி அல்லது எம்.பிக்களின் ஆதரவு இல்லாத சூழலில், வேறு வழியின்றி சர்வகட்சி ஆட்சி அமைப்பதை, ஒரு தெரிவாக கையில் எடுத்திருந்தாரா என்பதும் சந்தேகமே!

ஆயினும், அதற்கான முயற்சிகளை அவர் முழுமையாக மேற்கொண்டார் எனலாம். அதுகைகூடாத நிலையில், இப்போது அப்பாதையில் இருந்து திரும்பி, தேசிய அரசாங்கம் என்ற வழித்தடத்தில், ஜனாதிபதி பயணிக்கத் தொடங்கி இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட கட்சிகள், ஆதரவளிக்கும் வாய்ப்புகள் இல்லை எனத் தெரிகின்றது. அதாவது, இதிலுள்ள தனிப்பட்ட எம்.பிக்களின் ஆதரவு கிடைக்கலாம் என்றாலும், கட்சிகளாக ஆதரவளிக்காமல் விடலாம் என்பதாகும்.

எது எவ்வாறாயினும், மக்களின் பிரச்சினை இதுவல்ல! யார் ஜனாதிபதியாக வருகின்றார்? எந்தக் கட்சி அதிகாரத்தில் உள்ளது? தனிக்கட்சி ஆட்சியா அல்லது கூட்டு ஆட்சியா என்பதைப் பற்றி, மக்களுக்கு கவலையில்லை.

மக்களது கவலைகளெல்லாம், தமது வாழ்வியல் நெருக்கடிகள் எப்போது தீரும் என்பது பற்றியதாகும். இந்தப் பொருளாதார நெருக்கடிகள், வாழ்க்கைச் செலவு சுமை, அரசியல் நெருக்கடிகள், அடக்குமுறைகள் எப்போது மாறும் என்பவை பற்றியதாகும். சந்தோசமாக, நிம்மதியாக வாழ்வதற்கான சூழலையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

மக்களை மறந்த ஆட்சியைச் செய்தமையும் மக்களது பிரச்சினைகளை கணக்கெடுக்காமல் விட்டதும்தான் குறிப்பாக, கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி கவிழ்ப்புக்கு பிரதான காரணமாகும். ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியான பிறகு, நாட்டின் நிலைமைகளில் சிறு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை மறுக்க முடியாது. ஆனால், பிரச்சினைகள், நெருக்கடிகள் முற்றாகத் தீரவில்லை. மிகக் கிட்டிய காலத்தில் அந்த அபூர்வம் நிகழும் என்று நம்பவும் முடியாதுள்ளது.

10 ரூபாயால் டீசலின் விலையைக் குறைத்து விட்டு, 75 சதவீதத்தால் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. கேஸ் விலையை கொஞ்சம் குறைத்துவிட்டு, 253 ரூபாயால் மண்ணெண்ணெய்க்கு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில், சர்வகட்சி அரசாங்கம் வந்தால் அல்லது, தேசிய அரசாங்கம் வந்தால் மட்டும் எல்லாம் சரியாகிவிடும் என்பது, ஏற்றுக் கொள்ள முடியாதது. அது உண்மையில், ஒரு மாயை; பொய்க் கற்பிதம் என்றுதான் சொல்ல வேண்டும்.

"ராஜபக்சர்கள் ஆட்சிக்கு வந்தால்...', "அறுதிப் பெரும்பான்மை கிடைத்தால்...", "பசில் அமைச்சரானால்...", "20ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டால்...", "தம்மிக்க பெரேரா பதவிக்கு வந்தால்..." இப்படிப் பிரச்சினைகள் தீரும், நெருக்கடிகள் தீரும் என, கடந்த காலங்களில் கூறப்பட்டதை, நாம் அறிவோம். அதுபோன்ற ஒரு 'பேய்க்காட்டலின்' சூட்சுமமான வடிமாகவே, சர்வகட்சி அரசு, தேசிய அரசு அமைந்தால் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்பதும் தெரிகின்றது.

ஏனெனில், இலங்கையிலுள்ள பிரச்சினை அரசியலமைப்பு, சட்டங்கள், ஆட்சி முறைமை எழுத்தில் எப்படி இருக்கின்றது என்பது பற்றியதல்ல. மாறாக, அவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்துகின்ற தரப்பினர் எப்பேர்ப்பட்டவர்களாக இருக்கின்றனர் என்பதாகும்.

நல்ல ஆட்சியாளர்களும், நல்ல அரசியல்வாதிகளும் இருந்தால் ஒற்றையாட்சியிலும் மக்கள் நிம்மதியாக வாழலாம்.

அவ்வாறில்லாத ஆட்சியாளர்களையும் மக்கள் பிரதிநிதிகளையும் வைத்துக்கு கொண்டு சர்வகட்சி அரசாங்கம் அமைத்தாலும் தேசிய அரசாங்கம் அமைத்தாலும், அது பூசிமெழுகப்பட்டு, வெளியில் பார்ப்பதற்கு நன்றாக இருக்குமே தவிர, அதனால் நாட்டு மக்களுக்கு குறிப்பிடத்தக்க அனுகூலங்கள் கிடைக்கப் போவதில்லை.

எனவே, 'அவர்கள்' மாறாமல், ஆட்சியின் 'ஸ்டைல்'கள் மாறுவதால், மக்களுக்கு நல்லது நடக்கும் என்று கூறுவதெல்லாம், ஒரு வாகனத்தின் நிறத்தை மாற்றினால் அது வேகமாக ஓடும் என்பதைப் போன்ற கற்பிதங்களேயன்றி வேறொன்றுமில்லை.

## கடிதங்கள்

### பூநகரி பிரதேச செயலாளர் பிரிவு:

# உவர் நிலங்களாக மாறிவரும் விவசாய நிலங்கள்

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி, கரியாலை, நாகபடுவான் பகுதிகளில் உள்ள உவர் நீர் தடுப்பணைகள் சேதமடைந்தமையால், ஆறாயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாய நிலங்கள், உவர் நிலங்களாக மாறியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல்லவராயன்கட்டு, கரியாலை, நாகபடுவான், குமுழமுனை, நொச்சிமுனை ஆகிய பகுதிகளில் உள்ள விவசாய நிலங்கள், கடந்த கால யுத்தம் காரணமாக, கரையோரப் பகுதிகளில் காணப்பட்ட உவர் நீர்த் தடுப்பணைகள் சேதமடைந்தமை காரணமாக, கடல்நீர் உட்புகுந்து, கடந்த காலங்களில் விவசாயச் செய்கை நிலங்களாகக் காணப்பட்ட பயிர் செய்கை நிலங்களை, உவர் நிலங்களாக மாறியுள்ளது.


இவ்வாறு, உவர் நீர்த்தடுப்பணைகள் அழிவடைந்தமையால், உவர் நீர் உட்புகுந்ததால், சுமார் ஆறாயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த விவசாய நிலங்களை வாழ்வாதாரமாகக் கொண்டிருந்த விவசாயிகளும் அவர்களின் குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே, இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக, அழிவடைந்திருக்கும் உவர்நீர்த் தடுப்பணைகளை புதுப்பித்துத் தருவதற்கு, பொறுப்புக்கூற கடமைப்பட்டவர்கள் முன்வர வேண்டும் எனவும் வேண்டுகோள் முன்வைக்கப்படுகின்றது.

யது பாஸ்கரன்

# அதிதி ஷங்கரின் விருப்பத்துக்குரியவர்கள்








கார்த்தி நடித்த 'விருமன்' திரைப்படத்தில் நாயகியாக அறிமுகமான நடிகை அதிதி ஷங்கர் அடுத்ததாக சிவகார்த்திகேயன் நடிக்கும் மாவீரன் என்ற படத்தில் அவருக்கு ஜோடியாக நடித்து வருகிறார்.

இந்த நிலையில் சூர்யா தயாரிப்பில் நடிகையாக அறிமுகமான நான், சூர்யாவுக்கு ஜோடியாகவும் விரைவில் நடிப்பேன் என்ற நம்பிக்கை இருக்கிறது என்று பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

மேலும் தனக்கு பிடித்த நடிகர்களில் ஒருவர் விஜய் என்றும் அவரது நடனம் எனக்கு மிகவும் பிடிக்கும் என்றும் அவருடன் சேர்ந்து நடனம் ஆட வேண்டும் என்று எனக்கு ஆசை என்றும் அதிதி ஷங்கர் இன்னொரு பேட்டியில் தெரிவித்துள்ளார்.

மொத்தத்தில் கார்த்தி, சிவகார்த்திகேயனை அடுத்து சூர்யா, விஜய் படங்களில் நடிக்க அதிதி விருப்பம் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருமண கிசுகிசு





நடிகர் சிம்பு ஹீரோவாக அறிமுகமான 'காதல் அழிவதில்லை' என்ற திரைப்படத்தில் நாயகியாக அறிமுகமானவர் நடிகை சார்மி. இதனையடுத்து 'காதல் கிசுகிசு', 'லாடம்', 'ஆஹா எத்தனை அழகு' உள்பட ஒரு சில தமிழ் படங்களிலும் ஏராளமான தெலுங்கு திரைப்படங்களிலும் நடித்தார்.

தெலுங்கு திரை உலகில் பல பிரபலங்களுடன் நடித்த இவர் தற்போது தெலுங்கில் சில திரைப்படங்களை தயாரித்து வருகிறார்.

இந்த நிலையில் நடிகை சார்மி மற்றும் இயக்குநர் பூரி ஜெகன்நாத் ஆகிய இருவரும் காதலித்து வருவதாகவும் விரைவில் திருமணம் செய்ய போவதாகவும் தெலுங்கு திரை உலகில் கிசுகிசுக்கள் பரவிவருகின்றன.

இதுகுறித்து விளக்கம் அளித்துள்ள இயக்குநர் பூரி ஜெகன்நாத், சார்மி தனக்கு பல விஷயங்களில் ஆதரவாக இருக்கிறார் என்றும் எனக்கு 13 வயதில் இருந்தே அவரை தெரியும் என்றும் 20 ஆண்டுகளாக அவருடன் சேர்ந்து பயணித்து வருகிறேன் என்றும் அவர் எனக்கு நல்ல சினேகிதி என்றும் எங்கள் இருவருக்கும் அதைத் தாண்டி வேறு எந்த உறவும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

50 வயது பெண்ணுடன் சேர்ந்து படம் தயாரித்தால் யாரும் கண்டு கொள்ள மாட்டார்கள் என்றும் சார்மி இன்னும் இளமையான பெண்ணாக இருப்பதால்தான் எங்கள் இருவரையும் இணைத்து தவறாக பேசுகின்றார்கள் என்றும் காதல், கவர்ச்சி எல்லாம் கொஞ்ச நாட்கள் தான் இருக்கும் ஆனால் நட்பு மட்டுமே நிரந்தரமாக இருக்கும் என்றும் இயக்குநர் பூரி ஜெகந்நாத் தெரிவித்துள்ளார்.



## கெட்ட குணம்

நடிகை திரிஷா அரசியலில் ஈடுபட உள்ளதாக கடந்த சில நாட்களாக தகவல் பரவி வந்தது. அவர் தேசிய கட்சியான காங்கிரசில் இணைய உள்ளதாக கூறப்பட்டது.

ஆனால் இந்த தகவலை திரிஷாவின் தாயார் மறுத்துள்ளார். திரிஷாவுக்கு அரசியலில் ஈடுபடும் எண்ணமே இல்லை என்றும் அவர் குறித்து பரவும் இந்த தகவல் வெறும் வதந்தி என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் தனது சமூக வலைதளப் பக்கத்தில் நடிகை திரிஷா வெளியிட்ட பதிவு அனைவரையும் அதிர்ச்சி மற்றும் குழப்பமடைய செய்துள்ளது.

அவரது பதிவில், ...கெட்ட குணம் கொண்டவர்கள் நம்மிடம் பேசுவதை நிறுத்தி விட்டால் அது ஒரு நல்ல விஷயமாக பார்க்கவேண்டும். ஒரு குப்பை தன்னைத்தானே வெளியேறி கொள்வதைப் போன்றது எனப் பதிவிட்டுள்ளார்.

யாரை மனதில் வைத்து அவர் இதை பதிவு செய்துள்ளார் என ரசிகர்கள் பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## அடுத்தடுத்து கமல்?



கௌதம் மேனன் இயக்கத்தில் வேட்டையாடு விளையாடு படம் 2006-ல் திரைக்கு வந்து ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. இப்படத்தின் 2-ம் பாகம் எடுக்க இயக்குநர் கௌதம் மேனன் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கமல்ஹாசன் நடிப்பில் விஸ்வரூபம் 2-ம் பாகம் வெளியாகி வரவேற்பை பெற்றது. தற்போது இந்தியன் 2-ம் பாகத்தில் கமல் நடித்து வருகிறார். சில பிரச்சினைகளால் நிறுத்திவைக்கப்பட்டுள்ள இந்தியன் 2 படப்பிடிப்பு விரைவில் தொடங்க உள்ளது.

படப்பிடிப்புக்கான ஏற்பாடுகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன. கமல்ஹாசன் நடிப்பில் அண்மையில் திரைக்கு வந்து வசூல் சாதனை படைத்த விக்ரம் படத்தின் 2-ம் பாகமும் உருவாகவுள்ளது. தேவர் மகன் படத்தின் இரண்டாம் பாகத்தை எடுக்கவும் திட்டமிட்டு வருவதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் வேட்டையாடு விளையாடு படத்தின் இரண்டாம் பாகமும் உருவாக்க இயக்குநர் கௌதம் மேனன் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. வேட்டையாடு விளையாடு படத்தின் இரண்டாம் பாகத்துக்கான திரைக்கதையை எழுதி முடித்து விட்டதாகவும், படப்பிடிப்பை தொடங்குவதற்கான நேரத்தை எதிர்பார்த்து இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

புதுடெல்லி

# அமெரிக்க 'ட்ரோன்'கள்: அரசு பேச்சில் முன்னேற்றம்




அமெரிக்காவிடம் இருந்து இந்திய இராணுவத்துக்கு 30, 'எம்க்யூ9பி பிரிடேடர் ட்ரோன்கள்' வாங்குவது தொடர்பான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்தியா - சீனா இடையே லடாக் எல்லையில் மோதல் ஏற்பட்டதை தொடர்ந்து, எல்லைப் பகுதி கண்காணிப்பில் இந்திய இராணுவம் தீவிரம் காட்டி வருகிறது. 'ட்ரோன்' எனப்படும் ஆளில்லா சிறிய ரக விமானங்கள் வாயிலாக, எல்லை கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், கண்காணிப்பு மட்டுமின்றி, தாக்குதலும் நடத்தும் திறன் உடைய, 'எம்க்யூ9பி பிரிடேடர்' என்ற ட்ரோனை அமெரிக்காவிடம் இருந்து வாங்கும் முயற்சியை கடற்படை மேற்கொண்டது. இராணுவம், விமானம் மற்றும் கடற்படைக்கு சேர்த்து மொத்தம் 30 ட்ரோன்களை, 23 ஆயிரத்து 700 கோடி ரூபாய்க்கு வாங்க திட்டமிடப்பட்டது.

தார்வாட்

## காவல்காத்த 5 பொலிஸார் கைது

கர்நாடகாவில், விசாரணைக்கு நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்ட கொலை குற்றவாளியை, காதலியுடன் லொட்ஜ் அறையில் தங்க வைத்து, வெளியே காவலுக்கு நின்ற ஐந்து பொலிஸார் கைது செய்யப்பட்டனர்.

கர்நாடக மாநிலம், பல்லாரியில், 2009ஆம் ஆண்டு நடந்த கொலை வழக்கில், 20 ஆண்டு சிறை தண்டனை பெற்ற பச்சா கான், பல்லாரி மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். ஹுப்பள்ளியில் இர்பான் கான் என்பவர் கொலை வழக்கில் இவரை ஆஜர்படுத்த, பல்லாரியிலிருந்து தார்வாட் நீதிமன்றத்திற்கு பொலிஸார் அழைத்து வந்தனர்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பின், சிறைக்கு செல்லாமல், உடன் வந்த ஐந்து பொலிஸாரின் உதவியுடன் பச்சா கான், தார்வாட் சத்துாரில் உள்ள, 'பிரக்ருதி ரெசிடென்சி' என்ற லொட்ஜில் தங்கினார். இது குறித்து, நகர பொலிஸ் ஆணையாளர் லாபுராமுக்கு தகவல் கிடைத்தது. அதிர்ச்சியடைந்த அவர், ஹுப்பள்ளி வித்யாகிரி பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தார். விரைந்து சென்ற பொலிஸார், ஐந்து பொலிஸாரையும் கைது செய்தனர்.

மீரட்

## பாகிஸ்தானியர் மீதான வழக்கில் மீண்டும் விசாரணை

உத்தர பிரதேசத்தின் ஷாம்லி பகுதி ஜோலா கிராமத்தில் கடந்த 2000-ம் ஆண்டில் முஹமது வாரிஸ் கைது செய்யப்பட்டார். பாகிஸ்தானை சேர்ந்த அவரிடம் இருந்து கையெறி குண்டுகள், துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டன. அவருக்கும் ஜெய்ஷ் இ முஹமது தீவிரவாத அமைப்புக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து பல்வேறு பிரிவுகளின் கீழ் அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

2017ஆம் ஆண்டில் முஹமது வாரிஸுக்கு, ஷாம்லி நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்தது. இதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் அவர் மேன்முறையீடு செய்தார்.

எனினும், மத்திய அரசு, மாநில அரசின் அனுமதி பெறாமல் அவருக்கு சிறை தண்டனை விதிக்க முடியாது. முறையான அனுமதி பெறாததால் முஹமது வாரிஸை விடுதலை செய்து உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

2019 டிசெம்பரில் அவர் விடுதலை செய்யப்பட்டார். அவரை மீண்டும் பாகிஸ்தானுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் அவர் பாகிஸ்தானை சேர்ந்தவர் கிடையாது என்று அந்த நாட்டு அரசு மறுத்ததால், அவரை சொந்த நாட்டுக்கு அனுப்ப முடியவில்லை. இந்நிலையிலேயே அவருக்கு எதிரான வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்படவுள்ளது.

புதுச்சேரி

## இலங்கைக்கு கப்பல் சேவை

காரைக்காலில் இருந்து இலங்கை காங்கேசன் துறைமுகத்திற்கு பயணிகள், சரக்கு கப்பல் சேவை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என முதலமைச்சர் ரங்கசாமி அறிவித்துள்ளார். தனியார் பங்களிப்புடன் கப்பல் சேவை தொடங்கப்பட உள்ளதாக பேரவையில், ரங்கசாமி கூறியுள்ளார்.



புதுடெல்லி

## இலவசங்கள் ஏழ்மை நிலைக்கு தள்ளவில்லை

### உச்ச நீதிமன்றத்தில் தி.மு.க வாதம்



இலவசங்கள் என்று பொதுமைப்படுத்தி அழைக்கப்படும் நலத்திட்டங்களால், தமிழக அரசு மக்களை ஏழ்மைக்கு தள்ளவில்லை என்று உச்ச நீதிமன்றத்தில் திராவிட முன்னேற்ற கழகம் (தி.மு.க) சார்பில் வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

தி.மு.க சார்பில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் சார்பில் எழுத்துபூர்வமாக வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது. அரசின் நலத்திட்டங்களால் மக்கள் மத்தியில் வருமான இடைவெளி குறைந்துள்ளது. மாநில வளர்ச்சிக்கு அது வித்திட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இதுபோன்ற திட்டங்கள் தான் தமிழகத்தை ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி குறியீட்டின் அடிப்படையில் தேசத்தில் முதல் மூன்று மாநிலங்கள் பட்டியலில் இடம்பெறச் செய்துள்ளது. மாநில தொழில்துறை வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளது. நாடு முழுவதும் உள்ள 100 தலைசிறந்த கல்வி நிறுவனங்களில் 18 தமிழகத்தில் இடம்பெற்றுள்ளன.

மாநிலத்தின் வளம் காரணமாக, பிற மாநிலங்களில் இருந்து வேலைக்காக தமிழகத்திற்கு புலம்பெயர்ந்து வருவோரின் சதவீதம் 8.3 ஆக உள்ளது என்றும் தெரிவித்துள்ளது.



## மணிவிழா...

புதுச்சேரி, திருக்காஞ்சியில் 'யுவர் பேக்கர்ஸ்' சார்பில், 61 தம்பதிகளுக்கு மணிவிழா மற்றும் 64 அடி உயர சிவன் சிலை பிரதிஷ்டை திருப்பணி தொடக்க விழா ஆகியவற்றில் பங்கேற்று மணமக்களுக்கு, கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் வாழ்த்து தெரிவித்தார்.



மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றிய நியூசிலாந்து

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை நியூசிலாந்து கைப்பற்றியுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை நியூசிலாந்தும், இரண்டாவது போட்டியை மேற்கிந்தியத் தீவுகளும் வென்றிருந்த நிலையில், பார்படோஸில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மூன்றாவது போட்டியை வென்றமையைத் தொடர்ந்தே 2-1 என தொடரை நியூசிலாந்து கைப்பற்றியுள்ளது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்தின் பதிலணித்தலைவர் டொம் லேதம், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், கைல் மேயர்ஸின் 105 (110), அணித்தலைவர் நிக்கலஸ் பூரானின் 91 (55), ஷே ஹோப்பின் 51 (100), அல்ஸாரி ஜோசப்பின் ஆட்டமிழக்காத 20 (06) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 301 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ட்ரெண்ட் போல்ட் 3, மிற்செல் சான்ட்னெர் 2, டிம் சௌதி ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 302 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, லேதமின் 69 (75), டரைல் மிற்செல்லின் 63 (49), மார்டின் கப்திலின் 57 (64), டெவோன் கொன்வேயின் 56 (63), ஜேம்ஸ் நீஷமின் ஆட்டமிழக்காத 34 (11) ஓட்டங்களோடு 47.1 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், ஜேஸன் ஹோல்டர் 2, ஜோசப் 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக லேதமும், தொடரின் நாயகனாக சான்ட்னெரும் தெரிவாகினர்.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## லீட்ஸிடம் தோற்ற செல்சி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், லீட்ஸ் யுனைட்டெட்டின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-3 என்ற கோல் கணக்கில் செல்சி தோற்றிருந்தது.

இதேவேளை, நியூகாசில் யுனைட்டெட்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 3-3 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி சமப்படுத்தியிருந்தது. சிற்றி சார்பாக, இல்கி குன்டோகன், எர்லிங்க் ஹலான்ட், பெர்ணார்டோ சில்வா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். நியூகாசில் சார்பாக, மிகேல் அல்மிரோன், கலும் வில்சன், கெய்ரான் ட்ரிப்பியர் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



பிரெஞ்சு லீக் 1 தொடர்:

## லில்லியை வீழ்த்திய பரிஸ் ஸா ஜெர்மைன்

பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லீக் 1 தொடரில், லில்லியின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 7-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான பரிஸ் ஸா ஜெர்மைன் வென்றது.

பரிஸ் ஸா ஜெர்மைன் சார்பாக, கிலியான் மப்பே மூன்று கோல்களையும், நெய்மர் இரண்டு கோல்களையும், லியனல் மெஸ்ஸி, அஷ்ரஃப் ஹகிமி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர். லில்லி சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜொனதன் பம்பா பெற்றிருந்தார்.

இத்தாலிய சீரி ஏ தொடர்:

## சமநிலையில் மிலன் அத்லாண்டா போட்டி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், அத்லாண்டாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் ஏ.சி மிலன் சமப்படுத்தியிருந்தது.

மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை இஸ்மயில் பென்னகர் பெற்றதோடு, அத்லாண்டா சார்பாகப் பெறப்பட்ட கோலை ருஸ்லன் மலினோவ்ஸ்கி பெற்றிருந்தார்.





## நெதர்லாந்தை வெள்ளையடித்த பாகிஸ்தான்

ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் நெதர்லாந்தை பாகிஸ்தான் வெள்ளையடித்துள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், முதலிரண்டு போட்டிகளிலும் வென்றிருந்த பாகிஸ்தான், றொட்டர்டாமில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே 3-0 என நெதர்லாந்தை வெள்ளையடித்துள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

பாகிஸ்தான்: 206/10 (49.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: பாபர் அஸாம் 91 (125) ஓட்டங்கள். பந்துவீச்சு: பஸ் டி லீட் 3/50, விவியன் கிங்மா 2/15, அர்யன் டுட் 1/34, லோகன் வான் பீக் 1/33, ஷிராஸ் அஹ்மட் 1/41)

நெதர்லாந்து: 197/10 (49.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: டொம் கூப்பர் 62 (105), விக்ரம்ஜிட் சிங் 50 (85) ஓட்டங்கள். பந்துவீச்சு: நசீம் ஷா 5/33, மொஹமட் வாஸிம் 4/36)

போட்டியின் நாயகன்: நசீம் ஷா

இஸ்லாமாபாத்

# இம்ரான் கான் கைதாகலாம்

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீது பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனால், அவர் கைது செய்யப்படலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரும் , பிடிஐ கட்சித் தலைவருமான இம்ரான் கானின் உதவியாளர் ஷாபாஸ் கில் கடந்த வாரம் தேச விரோத வழக்கின் கீழ் கைது செய்யப்பட்டார். இந்த நிலையில், உடல் நலம் பாதிக்கப்பட்ட ஷாபாஸ் கில்லுக்கு போதிய சிகிச்சை அளிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.



இந்த நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இம்ரான் கான் தலைமையில் சனிக்கிழமை பேரணி நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து நடந்த பொதுக் கூட்டத்தில், அந்நாட்டின் பெண் நீதிபதி, பொலிஸ் அதிகாரிகள், தேர்தல் ஆணையம், எதிர்க்கட்சி தலைவர்களுக்கு எதிராக இம்ரான் கான் எச்சரிக்கை விடுத்தார்.

இதுதான் தற்போது சர்ச்சையாக மாறியுள்ளது. இம்ரான் கான் வரம்பு மீறி அரசு அமைப்புகளுக்கே மிரட்டல் விடுக்கிறார் என பாகிஸ்தான் அரசு அவர் மீது பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யதுள்ளது.

சூடான்

37,000 அடி உயரத்தில் பறந்த விமானத்தில்

## தூங்கிய விமானிகள்

சூடான் நாட்டின் கார்டோம் நகரில் இருந்து எத்தியோப்பியா தலைநகர் அட்டிஸ் அபாபாவுக்கு எதியோபியன் ஏர்லைன்ஸ்சின் போயிங் 737-800-ET343 பறந்து சென்றுள்ளது. இந்த விமானத்தை எத்தியோப்பியன் ஏர்லைன்ஸ் விமானிகள் இருவர் இயக்கியுள்ளனர்.

இந்த விமானம் நடு வானில் பறந்து கொண்டிருந்த போதுதான் விமானிகள் இருவரும் 25 நிமிடங்கள் அலட்சியாக தூங்கிய அதிர்ச்சிக்குரிய தகவல் வெளியாகியுள்ளது. இந்த விமானம் தரையிறங்க வேண்டிய அடிஸ் அபாபா நகருக்கு அருகே வந்த போதும், நீண்ட நேரம் தரையிறங்காமல் வானில் பறந்துள்ளது.

தொடர்ந்து, விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு நிலையத்தினருக்கு சந்தேகம் ஏற்படவே விமானிகளை அணுகி எச்சரித்துள்ளனர். ஆனால், விமானிகள் தரப்பில் இருந்து எந்த பதிலும் வராமல் தொடர்ந்து 37,000 அடி உயரத்திலேயே பறந்துள்ளது. இவர்கள் போக்குவரத்து கட்டுப்பாட்டு நிலையத்தை தொடர்பு கொள்ள முயற்சித்த போதிலும், அதற்கான சிக்னல் கிடைக்கவில்லை.

இதனால், 25 நிமிடங்கள் குழப்பம் நிலவிய நிலையில், விமானம் அட்டிஸ் அபாபா விமான நிலையத்தின் ரன்வே பாதையை தாண்டி சென்றுள்ளது. அப்போது தான் ஆட்டோ பைலட் மோட் துண்டிக்கப்பட்டு, எச்சரிக்கை அலாரம் ஒலித்துள்ளது. இந்த களேபரத்திற்கு பின்னர் தான் தங்களின் 25 நிமிட தூக்கத்தில் இருந்து விமானிகள் இருவரும் கண் விழித்துள்ளார்கள். நல்லவேளையாக இந்த சம்பவத்தின் காரணமாக விபத்து ஏதும் ஏற்படமால், விமான ஊழியர்கள், பயணிகள் உயிருக்கு ஆபத்து இல்லாமல் தப்பியுள்ளனர்.

ரஷ்யா

## கைது

இந்தியாவில் தற்கொலைப் படை தாக்குதல் நடத்த திட்டமிட்ட ஐஎஸ் தீவிரவாதி ரஷ்யாவில் கைது செய்யப்பட்டுள்ளார். கைதான ஐஎஸ் தீவிரவாதிக்கு துருக்கி நாட்டில் பயிற்சி தரப்பட்டதாக ரஷ்ய உளவுத்துறை தகவல் தெரிவித்துள்ளது.

சீனா

## வறட்சி அவசரநிலை சீனாவில் பிரகடனம்

கொளுத்தும் வெப்பநிலைக்கு மத்தியில் சீனா முதல் தேசிய வறட்சி அவசரநிலையை அறிவித்தது

சீனாவில் அதிகரிக்கும் வெப்பநிலை காரணமாக கடந்த சனிக்கிழமை அன்று பல மாகாணங்களில் நான்கு அடுக்கு எச்சரிக்கையான சிவப்பு நிற எச்சரிக்கையை சீனா வானிலை மையம் விடுத்துள்ளது.

சீனாவில் கன்சு, ஷான்சி, ஹெனான், அன்ஹூய் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை அன்று வெப்ப நிலை அதிகரிக்கும் என்று எச்சரிக்கப்பட்டு இருந்தது. இதனையடுத்து ஷான்சி, சிச்சுவான், சோங்கிங், ஹூபே, ஹுனான், அன்ஹுய், ஜியாங்சி மற்றும் ஜெஜியாங் பகுதிகளில் வெப்ப அளவு 40 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கக்கூடுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.



இதனைத் தொடர்ந்து வெப்பநிலையை எதிர்கொள்ள உள்ளூர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் மக்களை தேவையில்லாமல் வெளியில் வரவேண்டாம் என்றும் தீ விபத்துகள் வராமல் தடுக்க முன்னெச்சரிக்கையாக இருந்துகொள்ளவும் அறிவுறுத்தியுள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை சீனாவின் பல மாகாணங்களில் 35 டிகிரி செல்சியஸ் தாண்டி வெயில் கொளுத்தியது. இந்த நிலையில் மஞ்சள் எச்சரிக்கை விடப்பட்ட நிலையில் தற்போது சிவப்பு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

பீஜிங்

## தவறி விழுந்த ‘ஷூ’வை கொடுத்த யானை

உயிரியல் பூங்காவில் கூண்டுக்குள் தவறி விழுந்த, ‘ஷூ’வை எடுத்து குழந்தையிடம், யானை ஒப்படைத்துள்ள சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்திஉள்ளது.

சீனாவின் ஷான்டாங் மாகாணத்தில் உள்ள உயிரியல் பூங்காவுக்கு சமீபத்தில் சென்ற ஒரு குடும்பத்தினருக்கு ஆச்சரியமான சம்பவம் நடந்தது.

அந்த பூங்காவில் உள்ள யானைகளை, சற்று உயரமான மேடையில் இருந்து பார்த்து ரசிக்க முடியும்.அவ்வாறு ரசித்து கொண்டிருந்தபோது, ஒரு சிறுவன் அணிந்திருந்த ஷூ, தவறுதலாக கீழே விழுந்துவிட்டது. ஷூவை இழந்த சிறுவன் அழுதான். அந்தக் கூண்டுக்குள் இருந்த யானை ஒன்று, அதை பார்த்தது.



உடனடியாக அந்த இடத்துக்கு வந்த அந்த யானை, அந்த ஷூவை எடுக்க முயன்றது. மிகவும் சிறிதாக இருந்ததால், மிகவும் சிரமப்பட்டு எடுத்தது. தன் தும்பிக்கையை நீட்டி, உயரமான மேடையில் இருந்த சிறுவனிடம் ஒப்படைத்தது. சிறுவனும்மகிழ்ச்சியில் அந்த யானைக்கு சிறிது புற்களை கொடுத்தான். இது தொடர்பான ‘வீடியோ’ சமூக வலைதளத்தில் வேகமாக பரவி வருகிறது. அந்த யானையின் செயல் நெகிழ்ச்சியை ஏற்படுத்துவதாக உள்ளதாக பலரும் பதிவிட்டு உள்ளனர்.

தென் ஆப்பிரிக்கா

## புதிய அரசருக்கு மகுடம் சூட்டும் விழா

தென் ஆப்பிரிக்காவில் ஙங்குனி (Nguni) மொழி பேசும் பழங்குடியினர்களின் புதிய அரசருக்கு முடி சூட்டு விழா கோலாகலமாக நடைபெற்றது. இந்த பாரம்பரிய விழாவில் ஆயிரக்கணக்கான ஜூலு போர் வீரர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

48 வயதான மிசுசுலு கா ஸ்வெலிதினி ஜூலு ராஜ்ஜியத்தின் அரசராக முடிசூட்டப்பட்டார். வழக்கப்படி ஏராளமான விலங்குகள் பலியிடப்பட்டு விழா கோலாகலமாகத் துவங்கப்பட்டது.

1879 இசண்டல்வானா போரின் போது பிரிட்டிஷ் படைகளையே விரட்டியடித்த பெருமை இந்த ஜூலு ராச்சியத்திற்கு உண்டு. தங்கள் புது மன்னரை வரவேற்கும் விதமாக மக்கள் ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

புதிய ஜூலு மன்னராக முடிசூடிய மிசுசுலு ஜூலுவைக் காண ஆயிரக்கணக்கான மக்கள் முன்பாக, புதிதாக பதவியேற்ற ராஜா ஒரு ஈட்டியையும், கேடயத்தையும் பிடித்துக் கொண்டு கருப்பு இறகுகளால் ஆன ஆடை அணிந்து கூட்டத்தின் முன் தோன்றினார்.



புதிய மன்னர் பாரம்பரிய சிறுத்தையின் தோலையும், விலங்குகளின் நகங்களால் ஆன நெக்லஸையும் அணிந்து அரியணையில் இருந்து நலம் விரும்பிகளிடம் பேசிய அவர், ஜூலு தேசம் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்குகிறது. ஜூலு தேசத்தை ஒன்றிணைக்க பாடுபடுவேன் என்று நான் உறுதியளிக்கிறேன்,” என்று கூறினார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 23 ஒகஸ்ட் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது